Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 48

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 12 ஆம் நாள் முஹர்ரம் 12 (25-5-64) திங்கட்கிழமை இதழ் 104

# கூட்டு ஆட்சியில் என். எம். பிடிவாதம்

## தேர்தல் ஒப்பந்தத்தில் ஆளும்கட்சி நிபந்தனை

கொழும்பு, ஞாயிறு

**இடதுசாரிமுன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்கும் வாய்ப்பு இப்பொழுது முற்றாக இல்லையென்றும் ஆனால் சுதந்திரக்கட்சியுடன் லங்கா சமசமாஜக்கட்சி மட்டும் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைப்பதில் டாக்டர் என். எம். பெரேரா பிடிவாதமாக இருக்கிறார் என்றும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.**

இதேசமயம் டாக்டர் பெரேராவுக்கு நிதிமந்திரி போன்ற முக்கிய பதவி கொடுக்கப்படக்கூடாதென்று சுதந்திரக் கட்சியின் சில மந்திரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இடதுசாரி முன்னணியுடன் கூட்டரசாங்கம் அமைப்பதில் பிரதமருக்கு பூரண விருப்பமிருப்பினும் மந்திரிசபையில் சிலர் பிடிவாதமாக இருந்ததால் அதற்கு இடம் கிடைக்காது போய்விட்டதாகவும் கூறப்படுகிறது. 1960-ம் ஆண்டு ஜூலை மாத தேர்தல் போட்டிதவிர்ப்பு ஒப்பந்தத்தில் லங்கா சமசமாஜக் கட்சி கைச்சாத்திட்டாலே கூட்டரசாங்கம் அமைக்கவேண்டுமென்றும் சில அமைச்சர்கள் நிபந்தனை விதித்துள்ளனராம். இந்த நிபந்தனையை சமசமாஜக்கட்சி ஏற்றுக்கொள்ளாது என்றும் கூறப்படுகிறது.

இடதுசாரியினருடன் கூட்டு அரசாங்கம் அமைப்பதை மல்வத்தை மகாநாயகதேரோ எதிர்த்திருப்பதும் இந்த முயற்சியைப் பாதிக்கக்கூடுமெனக் கூறப்படுகிறது.

## நாடெங்கும் இன்று வெசாக் கொண்டாட்டம்

கொழும்பு, திங்கள்

பொரளை பௌத்த இளைஞர் சங்கத்தின் ஆதரவில் வெசாக் திருநாளைக் கொண்டாடப் பலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. திங்கட்கிழமை முழுநேரமும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன

வண. ஹறபுத்துக்கல தம்மவன்ஸ மஹாதேரோ நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைப்பார்.

⁂ ⁂ ⁂

இலங்கைவிபரிசனபவன்சயித்தியும் விரிவான முறையில் வெசாக் கொண்டாட முஸ்தீபுகள் செய்துள்ளது. வண. பன்னரஞ்ச மகாதேரோ, வண. ஆனந்த ஸ்ரீ சீலவன்ஸதேரோ ஆகியோர் நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்வார்.

⁂ ⁂ ⁂

சர்வதேச பௌத்தசங்கம் வெள்ளவத்தையில் வெசாக் தினத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளது. வண. கொதுகொட தர்மவம்ஸ தேரோ, வண. தம்மசோக நாயக்கதேரோ ஆகியோர் இங்கு நிகழும் நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்வர்.

⁂ ⁂ ⁂

தெமட்டக்கொடை வீதியில் தையல் நிலையத்திற்கெதிராக மாபெரும் பந்தல் ஒன்று நிர்மாணிக்கப்படும். புத்தரது பல்வேறு வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் சித்தரிக்கும் விதத்தில் இந்தப் பந்தல் அமைக்கப்படும்.

⁂ ⁂ ⁂

கண்டியில் வெசாக் மிகப் பிரமாண்டமான முறையில் வெகு கோலாகலமாகக்கொண்டாடப்படும். பஸ் ஊழியர்கள் இலங்கை போக்குவரத்துச்சபை நுகெகொடைக் கிளையில் மிகப் பெரியபந்தல் ஒன்றை அமைத்துள்ளனர்.

⁂ ⁂ ⁂

யாழ்ப்பாணத்தில் சிறைச்சாலையிலும் காகவிகாரையிலும் வெசாக தினத்தை விமரிசையாகக் கொண்டாடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள வெசாக பந்தல் சிறையிலுள்ள கிறிஸ்தவக கைதி ஒருவரால் அமைககப்பட்டதென்பது குறிப்பிடத்தககது. அவர் அழகிய சித்திரங்களாற் பந்தலை அலங்கரித்துள்ளார்.

## 'ஈடுசெய்ய முடியாத இழப்பு'

யாழ்ப்பாணம், திங்.

"நூல்நிலைய அதிபராகப் பல வருடங்கள் பணியாற்றி அநுபவம் பெற்றவரும் யாழ். நூலகர் சங்கத்தலைவருமான திரு. கே. செல்லையாவின் மறைவு நமக்கெல்லாம் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இலங்கை நூல் நிலையச் சங்கத்தின் செயற்குழுவில் முக்கியமான விஷயங்கள் ஆராயப்படும் போது திரு. செல்லையா தெரிவிக்கும் கருத்துக்களுக்கு அபாரமான மதிப்பு இருந்ததென்பதை அனைவரும் அறிவர். யாழ்ப்பாண கல்லூரியைப் பற்றி குறிப்பிடும்போதெல்லாம் அதன் நூல்நிலையத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசாமலும், நினைக்காமலும் எவரும் விடுவதில்லை. யாழ்ப்பாணக் கல்லூரி நூல்நிலையம் திரு. செல்லையாவுக்கு வாய்த்த நல்லதொரு ஞாபகச் சின்னமாகும்" என்று இலங்கை விஞ்ஞான தொழில் ஆராய்ச்சி நிலைய நூல்நிலையத் தலைவர் திரு. வி. மகாலிங்கம் அமெரிக்கத் தகவல் நிலையத்தில் நிகழ்ந்த, யாழ். நூலகர் சங்க விசேஷ கூட்டமொன்றில் பேசும் போது குறிப்பிட்டார்.

திரு. எஸ். எப். சந்தியாப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:

"திரு. செல்லையாவும், அவரது நூல் நிலையமும்தான் யாழ்ப்பாணக் கல்லூரி இலங்கையிற் பிரசித்தியடைவதற்கும் பெரிதுங் காரணமானவர்கள். இந்த மகத்தான சாதனை ஒரு இரவில் நிறைவேற்றக் கூடியதன்று. எத்தனையோ வருட ஊக்கமிக்க உழைப்பின் விளைவு அது. இலங்கையில் நூல் நிலைய அதிபர் என ஒருவரில்லாத காலத்தில் அந்தப் பதவியை வகித்து அப்பதவிக்கே பெருமை தேடித்தந்தவர் அவர்".

திரு. கே. செல்லையாவின் ஞாபகார்த்தமாக நினைவு மலர் ஒன்றை வெளியிடுவதென்று கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மலர் வெளியீட்டுச் சபை உறுப்பினர்களாகத் திருவாளர்கள் எஸ். எப். சந்தியாப்பிள்ளை (தலைவர்) ஆர். எஸ். தம்பையா, வி. மகாலிங்கம், எஸ். மாணிக்கம், கே. மாணிக்கவாசகர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். யாழ்ப்பாண கல்லூரி நூல் நிலைய அதிபர் திரு. ஆர். எஸ். தம்பையா யாழ். நூலகர் சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். திரு. கே. செல்லையாவின் மரணம் குறித்து அனுதாபத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப் பட்டது.

## "ஈழத்தின் பெருமையைப் பரவச் செய்தவர்"

### நூல்வெளியீட்டு விழாவில் பண்டிதமணிக்குப் பாராட்டு

விளிசிட்டி, திங்கள்

"ஐ. நா. கல்விச்சபைக்குச் சமர்ப்பிப்பதற்காக பேராசிரியர் திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் "இலங்கையும் தமிழும்" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் தயாரித்துவரும் ஆராய்ச்சிக் கட்டுரையில் ஈழத்துப் பூதந்தேவனார் தொடக்கம் விபுலானந்தர் வரை ஈழத்துப் பழைய புலவர்களின் வாழ்க்கையும், தொண்டும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இன்று நம்மிடையில் வாழ்ந்துவரும் இருவர் இந்தக் கட்டுரையில் இடம்பெற்றுள்ளார்களென்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஒருவர் எனது உடனுசிரியராகக் கடமையாற்றிய பண்டிதமணி கணபதிப்பிள்ளை. மற்றவர் எனது பழைய மாணவர் கனக. செந்திநாதன். இருவரும் என்னோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்பதால் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி, ஈழத்தின் பெருமையை வெளியுலகிலும் பரவும் வகை செய்தவரான பண்டிதமணியின் நூல் வெளியிடப்படும் விழாவுக்குத் தலைமைதாங்க எனக்கு வாய்ப்புக் கிடைத்ததை எனது பெரும்பேறு என்றே யான் கருதுகிறேன். உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றுள்ள இத்தள்ளாத பருவத்திலும் பண்டிதமணியவர்கள் தமிழுக்குஞ் சைவத்துக்கும் தன்னலமற்ற தொண்டாற்றிவருவதை எவருமே பாராட்டாமலிருக்க முடியாது. பண்டிதமணியவர்களின் வழியில் தொடர்ந்து தொண்டாற்றப் பலர் முன்வர வேண்டும்." இவ்வாறு திருநெல்வேலி, சைவாசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் திரு. எஸ். சுவாமிநாதன் வட இலங்கைத் தமிழ்நூற்பதிப்பகக் காரியாலயத்தில் நிகழ்ந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் "இலக்கியவழி" திருத்திய பதிப்பின் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்கி உரை

(8-ம் பக்கம் பார்க்க)

## விற்பனைக்கு ஏராளமான துணி

உடுப்பிட்டி, ஞாயிறு

57,892 ரூபா 90 சதம் பெறுமதியான 33,529 யார் துணி ரகங்கள் கட்டைவேலி பலநோக்க கூட்டுறவுச்சங்கங்களின் சமாஜத்திற்கு வந்திறங்கியுள்ளன. ஜப்பானிய துணிவகைகள் 'மல்-பீஸ் வேட்டிகள், சாரங்கள், கலர்பப்ளின் வகைகளே அதிகமாக உள்ளன.

இத்துணிகள் யாவும் வருகிற புதன்கிழமையளவில் பலநோக்க கூட்டுறவு சங்கங்களுக் வினியோகிக்கப்பட விருக்கும் ஐக்கிய பண்டகசாலைகளுக்கும் கின்றன. கூப்பனுக்கு 4 யார் விதமே இத் துணி ரகங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடும் வரட்சி

மன்னார், ஞாயிறு

மன்னார் பகுதியில் கடும் வரட்சியின் காரணமாக தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. குளங்கள் யாவும் வற்றிவிட்டமையால் தோட்டக்காடு, உயிலங்குளம், முருங்கன் முதலிய கிராமங்களுக்கு குளிப்பதற்குச் செல்லவேண்டியிருக்கிறது.

## டாக்டர்கள் மீண்டும் வேலைநிறுத்தம் செய்வர்?

கொள்ளுப்பிட்டி, ஞாயிறு

அரசாங்க நிபுணத்துவ டாக்டர்களும், டாக்டர்களும் தமது சம்பளத்தில் தமது கோரிக்கை படி மாற்றஞ் செய்வது பற்றித் அரசாங்கம் தீர்மானிக்கத் தவறினல் ஜூன் மாதம் 1-ம் திகதி மீண்டும் வேலை நிறுத்தம் செய்வதாக சுகாதார மந்திரி திரு. பதியுதீன் மாமூத்துக்கு அறிவித்தல் கொடுத்துள்ளார்கள்.

டாக்டர்களாயினும் சரி நிபுணத்துவ டாக்டர்களாயினும் சரி பிரத்தியேக வைத்தியம் செய்வது சம்பந்தமாக ஓய்வு பெற வேண்டுமென்ற அரசாங்க நிபந்தனைக்கிணங்கத் தாம் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பு சம்பளத் திருத்தம் பற்றி முடிவு அரசாங்கத்திடமிருந்து பெருவிடில் அரசாங்கம் அதுபற்றி கவனயீனமாக விடக் கூடியதாகவே இவ்வித வேலை நிறுத்த முடிவைச் செய்துள்ளனர் என்று தெரிகிறது.

### தேவை

ஜெயந்திநகர் ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. இருபது வயதிற்கு மேற்பட்டவராயும் S. S. C. சித்தியடைந்தவராயும் இருத்தல் வேண்டும். ஐக்கிய சங்கப் பரீட்சை பெற்றவருக்கு விசேஷ சலுகை உண்டு. சம்பளம் எல்லாம் உட்பட ரூபா 100-00. பிணை ரூபா 1000-00. 3-6-64 காலை 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும்.

ச. அந்தோனிப்பிள்ளை,
காரியதரிசி
ஜெயந்திநகர் ப.நோ.கூ.சங்கம்
உருத்திரபுரம். 378

### வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் டவுனில் நல்ல முறையில் ஆரம்பிக்கும் எலெக்ரோ பிளேட்டிங் கம்பெனிக்கு நல்ல திறமையும் அனுபவமுள்ள பொலிஷிங்& பிளேட்டிங் தெரிந்த திடகாத்திரமுள்ள வாலிபர்கள் தேவை. உடனே விண்ணப்பிக்கவும். நடன முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், கெல்லியடி, கரவெட்டி. 435

வீட்டுக்குவீடு சென்றுபொருட்கள் விநியோகிப்பதற்கு பெண் பிள்ளைகள் தேவை. 17, மொம்சாக் டிடம், பேவறிட் ஸ்ரோர்ஸில் விண்ணப்பிக்கவும். 443

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஒயின்மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துவி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்:
GABRIELS,Chunnakam. 275


## "சீர்கேட்டை நீக்க நாடகம் வேண்டும்"

யாழ்ப்பாணம், சனி

பல நல்ல நாடகங்கள்மூலம் சமூகத்திலேயுள்ள சீர்கேடுகள் குறைபாடுகளை போக்க வேண்டும். நாடகம் வெறும் பொழுது போக்காக மட்டும் அமையாது சமூக வளர்ச்சிக்கு வழிகோல வேண்டும்.

சமூக நாடகங்கள் நடத்துவதோடு புராண இதிகாசங்கள் அடிப்படையிலும் சரித்திர வரலாற்றுச் சம்பவங்களை தழுவியும் நாடகங்கள் உருவாக வேண்டும். கலை ஆர்வம் படைத்த இளைஞர்கள் ஆரம்பித்த அமையான கலைத் தொண்டுக்கு பெயரியவர்கள் ஒத்தாசை கொடுத்துப் பல விதத்திலும் உதவி புரிந்து ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறு கந்தர்மட வட்டார மாநகரசபை அங்கத்தவர் திரு. எஸ். நாகராஜா கந்தர்மடம் கந்தபுராண மண்டபத்தில் நடைபெற்ற"நாடகாலய" ஆரம்பவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கலை அரசு சொர்ணலிங்கம் பேசுகையில் நாடக சபையினர் கைக்கொள்ள வேண்டிய விதிமுறைகளைப்பற்றியும் ஒத்திகைஒழுங்காக வைக்கவேண்டிய அவசியம் பற்றியும் நடிகர்கள் தத்தம் பாகங்களுக்கேற்ப சிறப்பாக நடிக்கப் பழகிக்கொள்ளவேண்டும் என்பதுபற்றியும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நாடகத்தின் வெற்றிக்குக் காட்சி சோடனைகள், ஒப்பனை போன்ற அம்சங்களுடன் தத்ருபமான நடிப்பும் தேவையென்றும் சிறந்த நாடகங்கள் மூலம் சமூகத்தொண்டு புரியவேண்டும் என தாம் இளைஞர்களைக் கேட்டுக்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

முதலியார் முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் நாடகாசிரியர் தேவன் -யாழ்ப்பாணம் வழக்கறிஞர் திரு எஸ். கனகரெத்தினம், ஆசிரியர் சிவராமலிங்கம், செ. து. தெட்சணமூர்த்தி ஆகியோரும் பேசினார்கள்.

விழாவின் ஆரம்பத்தில் திவ்விய ஜீவனசங்கத்தினரின் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது.

"நாட்டியாலயாவின் போஷகராக முதலியார் முத்துத்தம்பியும், தலைவராக திரு. வாளரசனும், செயலாளராக செல்வன் ஆர். ரவீந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## புதிய கதிரேசன் ஆலயம்

அநுராதபுரம், சனி

இங்குள்ள புதிய நகரில் அமைக்கப்பெற்ற புதிய ஸ்ரீ கதிரேசன் ஆலயம் பூர்த்தியாகும் நிலைக்குவந்துவிட்டது.

புனித நகரத்தில் பழைய ஸ்ரீகதிரேசன் ஆலயத்திலுள்ள கதிரேசப் பெருமானையும் ஏனைய பரிவார மூர்த்திகளையும் இம்மாதம் 28-ந் திகதி காலையில் பூரண கும்பத்தில் ஆவாகனம் செய்து புதிய ஆலயத்துக்கு கும்பமூர்த்திகளையும் விக்கிரகங்களையும் பக்தர் கோஷ்டிகளின் முருக நாமபஜனையுடனும் மேளவாத்தியங்களுடனும் ஊர்வலமாக எடுத்துச்சென்று வேதாகம விதிப்படி சகல கிரியைகளுடனும் வாலஸ்தாபனம் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இப்புனித வைபவத்தில் இலங்கையின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் சைவப்பெருமக்கள் பெருந்திரளாக வந்து கலந்துகொள்வார்களென்று கோயில் தர்மகர்த்தா சபையினர் கருதுகின்றனர்.

வாலஸ்தாபனமாகும் வேலை நடைபெறுமுன்னரே பழைய கதிரேசன் ஆலயத்திலுள்ள உள்கொட்டகைகள் யாவும் தகர்க்கப்பட்டுவிட்டன. மூர்த்திகள் எடுத்துச் செல்லப்பட்டதும் மிகுதியாகவுள்ள கட்டிடங்களும் இடிக்கப்படுமென அறியப்படுகிறது.

## மூளாய்க் கோஷ்டி வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் விளையாட்டுக் கோஷ்டிக்கும் வடலியடைப்பு இளைஞர் விளையாட்டு கோஷ்டிக்கும் இடையே சினேகிதபூர்வமாக நடைபெற்ற தாச்சிப் போட்டியில் மூளாய் கோஷ்டி வெற்றி பெற்றது. போட்டி வழக்கம்பரை சனசமூக விளையாட்டுத் திடலில் நேற்று நடைபெற்றது.மூளாய் கோஷ்டி 9 பழங்களையும் வடலியடைப்புக் கோஷ்டி 5 பழங்களையும் எடுத்தன. போட்டிக்கு திரு. வ. மெ. தங்கராசா மத்தியஸ்தம் வகித்தார்.

# "தமிழ்ப்பெண்கள் மூலம் தமிழர் உரிமை பெறலாம்"

## 'சிலம்புச் செல்வி' நாடகத்தின் போது யாழ். மேயர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

'அரசியலில் இளங்கோ காட்டிய வழியில் செல்வதன் மூலமே தமிழ்ப் பெண் குலமும் பெண் இனத்தின் மூலம் தமிழ் இனமும் இழந்த சகல உரிமைகளையும் மீண்டும் பெற்று தமிழ் ஈழத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியும்' என்று யாழ்ப்பாண மேயர் திரு. தா. ச. துரைராசா நேற்று முன் தினம் மாலை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய மாணவிகளால் நடிக்கப்பெற்ற 'சிலம்புச் செல்வி' என்ற நாடகத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"கொழும்பு வாழ் தமிழ்ப் பெண்மணிகளால் நடாத்தப்படும், சைவ மங்கையர் கழகம் ஒன்று தான், அனைத்து இலங்கையிலும் இருக்கக்கூடிய தமிழ்ப் பேசும் இந்துக்களால் நடத்தப்படுகின்ற ஒரே ஒரு தனியார் துறைப் பாடசாலையாகும் என்பதை இங்கு பெருமையுடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தலைநகரான கொழும்பில் வாழ்ந்து கொண்டே, ஆடவரும் செய்யத் துணியாத துணிகரமான காரியத்தை வெற்றியுடன் சிறப்பாக நடத்தி, முன்மாதிரியாக விளங்கிவரும் இப்பெண்களின் தீரத்தையிட்டு முழு இந்துச் சமூகமும் பெருமைப்படவேண்டும். யாழ்ப்பாணம் பூராவிலும் இருக்கக் கூடிய இந்துச் சிறுவர்களுக்கென்று தனியொரு பாடசாலையைத் தானும், நம் கையே நமக்குதவி என நடத்த குடாநாட்டு மக்கள் நாம் தவறிவிட்டோம். சைவ மங்கையர் கழகம் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டால், காலப்போக்கில் அது சிங்கள பௌத்த பெண்கள் கல்லூரியாக மாறிவிடுமோ என்று அவர்கள் சந்தேகித்தனர். அவர்களது ஐயம் எவ்வளவு சரியானது என்பதை மலைநாட்டுச் சம்பவங்களும், விரைவில் வடகிழக்கு மாகாணங்களுக்கு வரப்போகும் சிங்கள ஆசிரியர் படையும் எமக்கு உணர்த்துகின்றன. ஆகவே. சைவ மங்கையர் கழகத்தாரது தீரச் செயலை வியந்து பாராட்டுகின்ற அதே நேரத்தில், யாழ்ப்பாணத்தில் அவர்களுக்குதேவைப்படும் உதவியோ, ஒத்தாசையோ எதுவாகவிருந்தாலும், அதை தங்கு தடையின்றி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அளிப்போமென யானும், மாநகர சபையும் உறுதி தருகிறோம்,

### முதல் தமிழ் காப்பியம்

சிலப்பதிகாரம் தவிர்த்து, தமிழில் பிற காப்பியங்கள் வேறும் இருந்திருக்கின்றன. ஆனால் அவை யாவும் பிறமொழித் தழுவல்களே. தமிழில் செய்யப்பட்ட முதற் காப்பியம் சிலப்பதிகாரம் ஒன்றே. தமிழில் இளங்கோ அடிகளால் அருளப்பட்ட இம் முத்தமிழ்க் காப்பியம், நாகரிக உலகத்தில் தமிழரின் உரிமையைப்பேணும் தனிப்பெரும் செல்வமாக விளங்குகின்றது. இது ஒன்றே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச் சாதி அடைந்திருந்த சீர்மையைத் துலக்கப் போதுமானது.

ஷேக்பியரின் நாடகம் புலமை காளிதாசனது காவியப் புலமை, ஹோமரின் வீரச் சுவை, தாந்தேயின் காதல் சுவை, கொதேயின் சொற் சுவை, வேர்ஜிலின், பொருட் செறிவு இக்தனையையும் இளங்கோவை சிலப் பதிகாரத்தில் ஒருங்கே காணலாம்.

சிலப்பதிகாரம் முழுவதும் இளங்கோ பெண்ணின் பெருமையையே பேசுகின்றார். பெருமைப்படவேண்டிய விஷயம், காப்பியத்தின் பெயர் கூட பெண்ணின் காலணியாகிய சிலம்பையே குறிக்கின்றது. காப்பியத் தலைவியாக "கண்ணகி" பாத்திரத்தைப் படைத்த இளங்கோ, அக்கதா பாத்திரத்தின் மூலமாக பெண்ணினத்தின் வரலாற்றிலேயே ஒரு புரட்சியைச் செய்திருக்கின்றார். புரட்சி செய்வதற்கு, கிளர்ச்சிகள் நடத்துவதற்கு தகுந்தவர்கள் ஆண்களே என்ற தப்பான தொரு கருத்து, இன்றும் இருக்கக் காண்கிறோம். ஆனால், இளங்கோவடிகளோ "தாங்க முடியாத கொடுங்கோன்மை தாண்டவமாடினால், ஆக்கும் பண்பு படைத்த பெண்களும் பழி வாங்கும் படையின் முன்னணியில் நிற்பர்; முரசை முழக்குவர்; அரசை அழிப்பர்"என்று சிலப்பதிகாரத்தின் மூலம் அறிவிக்கின்றார். தாய்மைக் குணத்தையே பெண்மைக்கு உரிமையாக்கினர் நம தமிழ்ப் பெரியார். ஆனால் அநீதி அரசோச்சினால், அதை அழிப்பதே பெண்ணின் தலையாய கடமை என்பது தான் சிலப்பதிகாரம் போதிக்கும் அரசியல் நெறியாகும். அரசு கொடுமை செய்யும் போது, தாய்மை உள்ளம் அநீதியால் நிலைகுலைக்கப்படுகிறது அங்ஙனம் நிலைகுலைக்கப்பட்ட தாய்மை உள்ளமே, ஆண்மையாகவும் அழிப்புச் சக்தியாகவும் மாறிவிடுகிறதென்ற புது நெறியை வேறு எந்தப் புலவரோ, கவிஞரோ முன்னெப்போதும் தீட்டாத புரட்சிச் சித்திரத்தை தீட்டியிருக்கிறார்.

### பெண்ணினத்தின் மூலம் உரிமை பெறலாம்

இலக்கிய உலகில் இளங்கோ காண்பித்த இப் புரட்சிப் பாதை இன்றைய அரசியல் சூழ் நிலையில், நம் எல்லோருக்கும். விசேடமாக சிறு சிறு சலுகைகளுக்காக அநீதிக்கு உடன்போகும்படி தம் தம் பிள்ளைகளையோ, கணவன் மாரையோ வற்புறுத்தக் கூடிய சகோதரிகளுக்கும், தாய்மாருக்கும் சிறந்தோர் வழி காட்டியாக அமைய வேண்டும். ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் கண்ணகியை ஓர் இலட்சியப் பெண்ணாகக் கொள்ள வேண்டும். அம்படியல்லாவிடில், சிலப்பதிகாரத்தை மனனம் பண்ணுவதோ,மேடைகளில் அரங்கேற்றுவதோ எவ்வித பயனையும் உண்டாக்காது. அரசியலில் இளங்கோ காட்டிய வழியில் செல்வதன் மூலமே தமிழ்ப் பெண் குலமும் பெண் இனத்தின் மூலம், தமிழ் இனமும் இழந்த சகல உரிமைகளையும் மீண்டும் பெற்று தமிழ் ஈழத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியும்".

சைவ மங்கையர் வித்தியாலயத்தின் அதிபர் செல்வி தகாசிப்பிள்ளை சபையோரையும்

(8-ம் பக்கம் பார்க்க)


அபிஷேகத் திரவியங்கள், கோவில் தேவைகளுக்கு வேண்டிய சாமான்கள், வாசனைதிகள், வத்தி வகைகள், சூடம், சாம்பிராணி, மருந்துச் சரக்குவகைகள, ஆயுர்வேத மருந்துகள், கோமியோபதி மருந்துகள், ஊசி மருந்துகள், சந்தனாதி தைலங்கள் வழமைபோல் நம்பிக்கையாகவும், சுத்தமாகவும் நிதான விலைக்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

புகழ்பெற்ற "ராதா" தயாரிப்பாளர்கள் தயாரித்து அளிக்கும்

★ ராதா மின்சார மருந்து
★ ராதா பிளட் டொனிக்
★ ராதா 99 ஓடிக்குளோன்
★ ராதா பயோரியா பற்பொடி
★ ராதா குரு பற்பொடி
★ ராதா குரு தைலம்
★ ராதா வாசனை சாந்துப் பொட்டுகள்
★ ராதா சைலால்
★ ராதா படைமருந்து

RADHA

மற்றும்

மெஷினில் அரைத்த பச்சைச் சந்தனம், மைசூர் சந்தன முகப் பவுடர், சுத்தமான சுகந்த சந்தனப் பவுடர், மயில் மார்க் திறம் சந்தன வில்லைகள் எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

"வாடிக்கையாளர்களின் திருப்தியே எமது குறிக்கோள்"

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 541

160, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

உதவி!




எழுதத் தயங்கும், தாமதமாகும் பேனைக்கு ஒரு தக்க உதவி! அதுதான் பார்க்கர் சுப்பர் குயிங்க் — சகல பேனைகளுக்கும் சாலச் சிறந்ததொரு மை. சுப்பர் குயிங்கில் எழுதும் போதே பேனையை சுத்திகரிக்கவும் அடைசலை அப்புறப்படுத்தவும் வல்ல சொல்வ - X உண்டு.

இது ஒரு
பார்க்கர் பேனை
கம்பனியின் உற்பத்தி
உலகினரால் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினா.

காஷ்மீர் பிரச்னை:

# "ஷேக் அப்துல்லாவின் எந்தயோசனையையும் பாகிஸ்தான் ஏற்கும்"

## வெளி விவகாரமந்திரி புட்டோ அறிவிப்பு

### ஷேக்குக்கு அமோக வரவேற்பு ஏற்பாடுகள்

ராவல்பிண்டி, மே 24

இன்றுமாலை பாகிஸ்தான் வந்துசேரும் காஷ்மீரின் முன்னள் பிரதமர் திரு. ஷேக் அப்துல்லாவுக்கு இங்கு மிகப் பிரமாதமான வரவேற்புகள் அளிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் இங்கு விஜயம் செய்தபொழுது அளிக்கப்பட்ட வரவேற்புபோன்று இவை இருக்குமென்று கூறப்படுகின்றது திரு. ஷேக் அப்துல்லா இன்று புதுடில்லியிலிருந்து விசேஷ பாகிஸ்தான் விமானம் மூலம் ராவல்பிண்டி வந்து சேருகிருர். இவரை வரவேற்கும் பொருட்டு பாகிஸ்தான் வெளிவிவகாரமந்திரி திரு. புட்டோ லண்டனிலிருந்து இன்று ராவல்பிண்டி திரும்பியுள்ளார்.

ராவல்பிண்டியில் திரு. புட்டோ நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில் 17 வருடகாலமாக நீடித்து வரும் காஷ்மீர் தகராறை சுமுகமாகத் தீர்த்து வைக்கும் பொருட்டு திரு.ஷேக் முகம்மது அப்துல்லா தெரிவிக்கும் எந்த யோசனையையும் பாகிஸ்தான் ஏற்றுக் கொள்ளும் என்றும் திரு. ஷேக் அப்துல்லா காஷ்மீர் மக்களின் உண்மையான ஒரு தலைவர் என்றும் அவரின் சமரச முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமென்றும் கூறினர்.

"திரு. ஷேக் அப்துல்லாவின் இந்தச் சமரச முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமென்பதே பாகிஸ்தானின் நோக்கமாகும். காஷ்மீர் பிரச்னைக்கு தீர்வுக் காணும்வகையில் திரு. ஷேக் அப்துல்லா நல்ல யோசனைகளைத் தெரிவிப்பார் என்று நாம் திடமாக நம்புகின்ருேம்" என்றும் திரு. புட்டோ கூறினர்.

இன்றுமாலை இங்குவந்து சேரும் திரு. ஷேக் அப்துல்லா பாகிஸ்தானில் இரண்டுவார காலம் தங்கியிருப்பார். பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுடனும் பல்வேறு அரசியல்கட்சித் தலைவர்களுடனும் திரு. ஷேக்அப்துல்லா பேச்சுகள்நடத்துவார். அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி அவர் இந்தியா திரும்புவார்.

## சிகானுக் கடிதம்

லண்டன், மே, 24

கம்போடியா சம்பந்தமான ஜெனிவா மகாநாடொன்றைக் கூட்டுவது குறித்து கம்போடிய ராஜ்யத் தலைவர் இளவரசர் நொரடோம் சிஹானுக், பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி திரு. பட்லருக்கு கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார்.

## சாவன்

கேப்கென்னடி, மே, 24

தற்பொழுது அமெரிக்காவிலுள்ள இந்திய பாதுகாப்பு மந்திரி சாவன், நேற்று கேப்கென்னடி தளத்துக்குச்சென்று பல ராக்கெட் தளங்களையும் பார்வையிட்டார். இம்மாதம் இவர் வாஷிங்டனுக்குத் திரும்பி அதிபர் ஜோன்ஸனுடன் பேச்சுக்கள் நடத்துவார்.

## ஒரு லட்சம் தபாற்கந்தோர்

புதுடில்லி, மே, 24

நடப்பு நிதி ஆண்டில் மொத்தம் ஒரு லட்சம் தபாற் கந்தோர்கள் இருக்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. நான்காவது திட்ட காலத்தில் மற்றுமொரு டெலிபோன்தொழிற்சாலையும் நிறுவப்படும்.

## மீண்டும் அவசரகால நிலைமை

ஜோர்ஜ்டவுண், மே 24

பிரிட்டிஷ்கயானவில் மீண்டும் அவசரகாலநிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக இங்கு பலபகுதிகளிலும் நடைபெற்ற இனக் கலவரங்களைத் தொடர்ந்தே அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. இதற்கு முன்பாக இரு தடவைகள் இங்கு இச் சட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது.

இந்தியர்களுக்கும் ஆபிரிக்கர்களுக்குமிடைய ஏற்பட்ட கைகலப்பு, சண்டைகள் விளைவாக இதுவரை 25 பேர் மாண்டுவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. பல தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். சீனித்தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்கின்றனர். நேற்று முன்தினம் ஒரு நீக்ரோ பெவிசாரும் இளம் இந்திய பொலிஸ்வீரரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். பல பகுதிகளில் ரயில் தண்டவாளங்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. நிலைமை இங்கு மோசமாக விருப்பதால் பிரிட்டிஷ் துருப்புகள் நேற்று இரவு வரவழைக்கப்பட்டன.

## மாஸ்கோவில் இந்தியமந்திரி

மாஸ்கோ, மே 24

இந்திய பெட்ரோல் இரசாயன மந்திரி திரு. ஹுமாயின் கபீர் மாஸ்கோ வந்து சேர்ந்துள்ளார். இவர் இங்கு ஒரு வாரகாலம் தங்கியிருப்பார்.

கி. பாகிஸ்தான்

# பௌத்த அகதிகள்: இலங்கை கவலை

## விபரங்களை அனுப்புமாறு இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனருக்கு ஸ்ரீமா உத்தரவு

புதுடில்லி, மே 24

**கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறும் பௌத்த அகதிகள் பற்றிய விபரங்களைச் சேகரித்து அனுப்பி வைக்குமாறு இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனரை இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா கேட்டுள்ளார் என்று இங்கிருந்து வெளியானதொரு செய்தி கூறுகிறது.**

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வரும் பௌத்த அகதிகள்பற்றி இலங்கை அரசாங்கம் மிகுந்த கவலைகொண்டிருக்கிறதென்றும் இந்த அகதிகள்பற்றிய தகவல்களை தாமதமின்றி அனுப்புப்படியும் பிரதமர் தமது குறிப்பில் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள பௌத்தர்களின் நலன்குறித்து இலங்கை அரசாங்கம் பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு ஏற்கனவே கவலை தெரிவித்துள்ளதென்றும் அவர்கள் விஷயத்தில் போதிய கவனமெடுக்குமாறு பாகிஸ்தானை இலங்கை கேட்டுள்ளதென்றும் செய்திகள் கூறுகின்றன.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து ஆயிரக்கணக்கான அகதிகள் இந்தியாவுக்கு வந்திருக்கின்றனர் என்றும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறதென்றும் இந்தியச் செய்தியொன்று கூறுகிறது.

மலேசிய தகராறு

# டோக்கியோவில் உச்சிமகாநாடு

## அடுத்த மாதம் நடைபெறும்

கோலாலம்பூர், மே. 24

மலேசியத் தகராறு சம்பந்தமாக அடுத்தமாத முதல் வாரத்தில் டோக்கியோவில் ஒரு உச்சி மகாநாடு நடைபெறும். இந்த மகாநாட்டில் இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் தலைவர்கள் கலந்து கொள்வார்கள்.

மலேசியா தகராற்றைத் தீர்த்து வைக்கும் பொருட்டு ஒரு உச்சி மகாநாட்டை நடத்துவது சம்பந்தமாக மலேசிய பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் விடுத்த யோசனைகளை இந்தோனேஷிய அதிபர் சுகர்ணே ஏற்றுக் கொண்டுள்ளதைத் தொடர்ந்து உச்சி மகாநாடு இப்பொழுது கூட்டப்படுகிறது.

பிலிப்பைன்ஸின் விசேஷ தூதர் திரு. லோப்பே நேற்று மலேசியப் பிரதமர் திரு.துங்கு அப்துல் ரஹ்மானைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர். இந்தப் பேச்சுக்களின் பின்னர் திரு. லோப்பே நிருபர்களுககு அளித்த பேட்டியில், மலேசியா தகராறு இன்னும் நீடிக்க மாட்டாது என்றும் மூன்று மாத காலத்துக்குள் ஒரு தீர்வு ஏற்படலாமென்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

டோக்கியோவில் ஆரம்பமாகும் உச்சி மகாநாடு சம்பந்தமான விபரங்கள் இப்பொழுது தயாரிக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீனவர்களை ரஷ்யா விடுவித்தது

மாஸ்கோ, மே, 24

சோவியத் யூனியனில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 55 ஜப்பானிய மீன்பிடிகாரர்களையும் ரஷ்யா விடுதலை செய்துள்ளது. சோவியத் யூனியன் எல்லைக்குள் இவர்கள் அத்துமீறிப் பிரவேசித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

## மிகப்பெரிய தொழிற்சாலை

புதுடில்லி, மே. 24

நாய்ப்பூருக்கு அருகே, நாட்டிலேயே மிகப்பெரிய படைசாதன தொழிற்சாலையொன்று அமைக்கப்படவிருக்கிறது.

# சுவரை ஊடுருவும் ஆற்றல் படைத்த 11 வயதுச் சிறுமி

## விஞ்ஞான ரீதியில் விளக்கமுடியாத எக்ஸ்-ரே கண்கள் இருக்கிறதாம்

மாஸ்கோ, மே, 24

பதினெரு வயதுள்ள ரஷ்யச் சிறுமியொருத்தி எதையும் ஊடுருவிப் பார்க்கும் தன்மையுடன் இப்பொழுது விளங்குகின்ருள்!

ரஷ்யாவிலுள்ள உல்யானேவ்ஸ்க் என்ற கிராமத்தைச் சேர்ந்த வீரா பெட்ரோவா என்ற இச்சிறுமிக்கு எக்ஸ்ரே கண் அமைப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

ஒரு தடவை இந்தச் சிறுமி, தனது தந்தையை நோக்கி; "அந்த அறைக்குள் அந்தப் பெண் ஏனப்பா அழுகிருள்?" என்று கேட்டாள். இதைக் கேட்டதும் தந்தை பிரமித்துப் போனர். குறிப்பிட்ட அறைக்குள் இருந்து அழுகைச் சத்தம் வெளியில் கேட்கவில்லை. அறைக்குள் ஒரு பெண் இருக்கிருள் என்பதும் யாருக்கும் தெரியாது. ஆனல் அச்சிறுமி தனது எக்ஸ்ரே கண்ணினல், சுவருக்கு ஊடாக அங்கு யார் என்ன செய்கிருர் என்பதை அறிந்து கொண்டு விட்டாள் என்பது பிறகுதான் புலனயிற்று.

மூன்று தடித்த புத்தகங்களின் கீழே மறைத்துவைத்துள்ள பத்திரிகையை அச்சிறுமியால் படிக்க முடிகின்றது! சுவர், கதவு, ஆகிய எல்லாவற்றையுமே அவளது பார்வை ஊடுருவவல்லது!

இச்சிறுமி தனது கண்களை மூடிக் கொண்டிருக்கையில்தான் அவளது இந்த எக்ஸரே சுபாவம் வெளிப்படுகிறது.

அவளது எக்ஸ்ரே திருஷ்டியை விஞ்ஞான ரீதியில் விளக்கத் தங்களால் இயலவில்லை என்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர்.

# கியூபா ராணுவம்-காஸ்ட்ரோ புரட்சியாளர் மோதல்

## பலர் கைது செய்யப்பட்டனர்

ஹவானா, மே 24

கியூபாவில் இறங்குவதற்கு முயற்சித்த காஸ்ட்ரோ எதிர்ப்புக் கோஷ்டிகளில் பலரை கியூபா இராணுவத்தினர் கைதுசெய்ததாக அறிவிக்கப்பட்டுளளது.

கடந்த ஐந்து தினங்களாக காஸ்ட்ரோ எதிர்ப்புக்கோஷ்டியினருக்கும் கியூபா இராணுவத்தினருக்குமிடையெ மோதல்கள் ஏட்பட்டுவருகின்றன. இருதினங்களுக்குமுன் ஏற்பட்ட ஒரு மோதலில் பலரை கியூபா இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்.

கியூபாவின் வடக்கு கடலோரப் பகுதிகளில், ஹவானவுக்கு மேற்கே எழுபது மைல் தூரத்திலுள்ள ஒரு மாகாணத்தில் ஆயுதம்தரித்த காஸ்ட்ரோ எதிர்ப்புக் கோஷ்டியினர் இறங்க முயற்சித்தபொழுது கியூபா இராணுவத்தினர் திடீரெனத் தாக்கி அவர்களிற் பலரைக் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# லாவோஸ் மகாநாடு ஜெனிவாவில் நடைபெறும்

## லாவோஸில் 2 சீன வீரர் கைது

மாஸ்கோ, மே 24

லாவோஸ் நெருக்கடி சம்பந்தமாக 14 நாடுகளைக் கொண்ட மகாநாடு ஜெனிவாவில் மீண்டும் கூட்டப்பட வேண்டுமென்ற பிரான்ஸின் யோசனையை ரஷ்யா வரவேற்றுள்ளது. இந்த மகாநாடு அடுத்தமாதம் கூட்டப்பட வேண்டுமென்றும் சோவியத் யோசனை தெரிவித்துள்ளது.

லாவோஸ் நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு வியண்டைனில் ஒரு மகாநாட்டைக் கூட்டும் லாவோஸ் பிரதமரின் யோசனை நல்ல பலனைக் கொடுக்காதென்றும் ஆனல் ஜெனிவா மகாநாட்டை மீண்டும் கூட்டுவதால் புதிய பலன்கள் எதுவும் கிடைக்கலாமென்றும் சோவியத்யூனியன் தெரிவித்துள்ளது.

லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவர்ணபூமாவிடுத்த ஒரு கோரிக்கையின் பேரில்தான் இம் மகாநாடும் கூட்டப்படுகின்றது.

இந்த மகாநாடு சம்பந்தமாக 14 நாடுகளுக்கும் இப்பொழுது ஆலோசனைகள் விடுக்கப்பட்டுள்ளன. இம்மகாநாடு அநேகமாக அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கலாம் என்று கூறப்படுகிறது.

**லாவோஸில்**

லாவோஸில் ஜார்ஸ் சமவெளிப்பிரதேசத்தில் அமெரிக்க விமானங்கள் குண்டுகள் போட்டு தமது தளங்களைத் தாக்கியதாக பதட்லாவோ வானெலி குற்றம்சாட்டியுள்ளது.

ஜார்ஸ் சமவெளியில் ஒரு இடத்தில் இடதுசாரிப்படைகளின் ஒருஅணியைநடுநிலைமைப் படைகள் விரட்டியடித்ததாக ஒரு செய்தி கூறுகின்றது.

**2 சீனர்கள் கைது**

லாவோஸில் இரண்டு கம்யூனிஸ்ட் சீன வீரர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதாக வாஷிங்டன் செய்தியொன்று கூறுகிறது.

**நடுநிலைமை தளபதி அறிவிப்பு**

பதட்லாவோ படைகளின் தாக்குதல்களை முறியடிக்கும் பொருட்டு தமக்கு இராணுவ உதவிகள் அளிக்குமாறு நடுநிலைமைப்படைத் தளபதிஜெனரல் கொங்லீ சினேகித நாடுகளைக் கேட்டுள்ளார்.

இதற்கிடையில் வியண்டைனிலிருந்து வெளியான செய்தியொன்றில், பதட்லாவோ படைகள் முன்னேறிக்கொண்டு வருகின்றன என்றும் தலைநகரான வியண்டைனை நோக்கி வரும் பாதையிலுள்ள தளங்களை அவர்கள் தாக்கிவருகின்றனர் என்றும் வியண்டைனை தாக்க அவர்கள் முயற்சிமேற்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**லண்டனில்**

லண்டனில் பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி திரு. பட்லர் நேற்று லாவோஸ் நிலைமை குறித்து பலருடன் ஆராய்ந்தார். லாவோஸ் நெருக்கடியைத் தீர்க்க எப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்று அவர் ஆலோச

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

ஞானம் என்னும் கவசத்தை அணிந்து கொள். பொறுமையுள்ளவன் மீது துக்கத்தின் அம்புகள் பாய முடியாது.

— பகவான்புத்தர்


ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி மீ 12 உ (25-5-64)


## லஞ்ச ஊழல்கள்

வீடமைப்பு இலாகாவிலுள்ள ஊழியருக்கெதிராக பொதுமக்களிடமிருந்து வரும் லஞ்சம் மற்றும் ஊழல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளையும் புகார்களையும் உடனடியாகத் தமது கவனத்துக்குக் கொண்டுவருமாறு தேசிய வீடமைப்புக் கமிஷனரை வீடமைப்புமந்திரி ஜனாப் பதியுதீன்மாமூத் கேட்டுள்ளார். வீடமைப்பு இலாகாவில் லஞ்சம் மற்றும் ஊழல்களை ஒழித்துக் கட்டுவதென்று தாம் தீர்மானித்துள்ளதாகவும் ஊழல்களில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை உடனடியாக அகற்றுவதென்று முடிவு செய்திருப்பதாகவும் மந்திரி கூறுகிறார். அவரின் துணிச்சலான தீர்மானத்தைப் பொதுமக்கள் நிச்சயம் வரவேற்பர்.

லஞ்சஊழல் வீடமைப்பு இலாகாவில் மாத்திரம்தான் நிலவுகிறதென்று கூற முடியாது. அரசாங்க இலாகாக்கள் பலவற்றிலும் ஊழல்கள் இருப்பதை பொது மக்கள் மட்டுமன்றி பொறுப்பான பதவி வகிக்கும் மந்திரிகள் பலரும் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளனர். லஞ்சம் மற்றும் ஊழல்களை ஒழிப்பதற்கு என பல்வேறு உத்தியோகத்தர்களை நியமித்துள்ளதுடன் பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளனவென்பது உண்மைதான். ஆனாலும் ஊழல்கள் குறைவதற்குப் பதில் அதிகரித்துத்தானிருக்கின்றன. சில சமயங்களில் ஊழல்களைக் கட்டுப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஊழியர்களே குற்றம் புரிந்த, "வேலியே பயிரை மேய்ந்த கதை"களும் வெளிவந்திருக்கின்றன. பெரிய முதலைகள் குற்றம் செய்துவிட்டுத் தப்பித்துக் கொள்கிறார்கள். சிறிய ஊழியர் அகப்பட்டுத் தண்டனைக்குள்ளாகிறார்கள்.

அரசாங்க இலாகாக்களில் மட்டுமல்ல, தனியார் துறைகளிலும்கூட இன்று ஊழல் அதிகரித்துள்ளது. பொதுமக்களாலேயே நடத்தப்படும்கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற ஸ்தலஸ்தாபனங்களிலும் ஊழல்கள் வேரூன்றியுள்ளன. லஞ்ச விசாரணைக்கமிஷன் நியமிக்கப்படுவதும் விசாரணை முடிவில் குற்றவாளிகள் நிருபிக்கப்பட்டதும் பின்னர் அவர்கள்மீது தண்டனை விதிக்கப்படுவதும் உண்டு. பெரிய மனிதர்கள்மீது குற்றங்கள் நிரூபிக்கப்பட்டாலும் அவர்கள் தப்பிவிடுவதற்கு வாய்ப்பிருப்பதாகவும் அரசியல்வாதிகள் தலையிடுவதும் இதற்குக் காரணமென்றும் பொதுவாக பொதுமக்கள் மத்தியில் அபிப்பிராயம் நிலவுகிறது.

லஞ்சம் மற்றும் ஊழல்களை ஒழித்துக்கட்ட வேண்டியது அவசியமென்பதை பொதுமக்கள் மட்டுமன்றி அரசாங்கமும் உணர்ந்துள்ளது. பொதுமக்களின் உதவியும் ஒத்துழைப்புமின்றி இதை ஒழித்துவிடவும் முடியாது. லஞ்சம் கொடுப்பவர்கள் இருப்பதால்தான் லஞ்சம் வாங்குபவர்களும் இருக்கிறார்கள். இந்த ஊழல்களை ஒழித்துக்கட்ட வழி என்ன? லஞ்சவிசாரணைக் கமிஷன்களை நியமித்து குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது மட்டும் போதாது. குற்றம் நிரூபிக்கப்பட்டதும் மற்றவர்கள் அதே குற்றத்தைச் செய்ய எண்ணிக்கூடப் பார்க்க முடியாதபடி தண்டனை விதிக்கப்பட வேண்டும். இதுமட்டும் போதாது. லஞ்சம் மற்றும் ஊழல்கள் ஏற்படாமல் தடுப்பதுபற்றியும் ஆராய்ந்து வழிகண்டுபிடிக்கப்பட வேண்டும்.

வீடமைப்பு இலாகாவில் ஊழல்களை ஒழித்துக்கட்ட முன்வந்துள்ள மந்திரிக்குப் பொதுமக்கள் உதவியும் ஒத்துழைப்பும் கொடுத்து அவரது முயற்சி வெற்றிபெறச் செய்ய வேண்டும். அப்பொழுதான் இதர மந்திரிகளும் இதே வழியைப் பின்பற்ற முன்வருவர்.

## திருக்குறள் மகாநாடு

### இன்றைய நிகழ்ச்சிகள்

தமிழ் மறைக் கழகத்தின் 12-வது திருக்குறள் மகாநாடு கரணவாய் உபதபாற்கந்தோருக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள 'பூதன் தேவனார்' அரங்கில் நடைபெறுகிறது. மகாநாட்டின் இன்றையநிகழ்ச்சிகள்.

திங்கட்கிழமை பிற்பகல் 6 மணி

தலைவர்: திரு. மூ. சிவசிதம்பரம் பா. உ. (உடுப்பிட்டி), தலைமை உரை: தலைவர். பாடசாலை மாணவர்களின் பேச்சு, பாட்டுப் போட்டிகள் விரிவுரைகள்: "திருவள்ளுவரின் மொழிநடை" - திரு. தனஞ்செயராஜ்சிங்கம் எம். ஏ. எம். லிற், "வள்ளுவர் புலமை" - பண்டிதர் செ. துரைசிங்கம், "வள்ளுவர் அறநெறி" - பண்டிதைசத்தியதேவி துரைசிங்கம்

### கவியரங்கு

பொருள் - திருவள்ளுவர் போற்றிய பண்புகள்.

அருள்:- திரு. வே. சிவக்கொழுந்து (யாழ்ப்பாணன்), அன்பு:- திரு. க. மாணிக்கம், குறளாமை.- திரு. மு. செல்லையா, சான்றாண்மை:- திரு.செ. கதிரேசபிள்ளை, செங்கோன்மை:- திரு. இ. அம்பிகைபாகன், பொறுமை:- திரு. தில்லைச்சிவன், வாய்மை:- திரு. இ. நாகராஜன், தாளாண்மை:- திரு. மன்னவன் கந்தப்பு.

### திருக்குறள் இசை விருந்து

திருமதி பரஞ்சோதியம்மாள் இராசமாணிக்கம்.

### நாடகம்

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி அளிக்கும் "புதிய பாதை"

—

## குருடர் தேசிய இடாப்பு

கொழும்பு, ஞாயிறு

குருடர்களை பதிவு செய்வதற்காக தேசிய இடாப்பு ஒன்று இப்பொழுது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, இதற்குப் பொறுப்பாக தேசிய கண்பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் டாக்டர் ஏ. விசுவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## குறளுக்கு உண்டோ இணை?

— ச. வே. பஞ்சாட்சரம் —

இன்னொருவர் பற்றி இழுக்காய்ப் பலபேசி
அன்னவரின் ஆக்கத்தில் மனம்வெந்து — பின்னவரை
வஞ்சிக்க எண்ணி மனதுள் நடுநடுங்கி
கிஞ்சித்தும் அமைதி கிடையாமல் — தஞ்சித்தம்
தீய உணர்வால் தீய்பட்டுத் தேய்வுற்று
காயும் பாலைக் கழுகாகி — நாவற்றி
நெஞ்சம் கருகி நினைவெல்லா மேகருகி
பஞ்சப் புலன்கள் பயன்கருதித் — துஞ்சவிடா
அன்பென்னும் தண்ணீர் அலைகொள்ளா நெஞ்சத்தில்
துன்பங்கள் முட்டித் துதைந்தாடும் — என்பதனை
அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்றென்று - அன்பின்றி
வரளும் நெஞ்சிற்கு வாழ்வில்லை என்ற
குரலுக் கிணையுண்டோ கூறு.

காளையரின் மேனிக் கட்டழகை கல்சமந்த
தோளழகை, நெஞ்சத் துணிவழகை - சூழிருளைக்
கீறிச் சிரித்துக் கிறங்கவைக்கும் பல்லழகை
வீறுற்று விம்மும் மார்பழகை - கூறிட்டு
அள்ளிச் செருகும் அரிவையரின் கூந்தலினை
துள்ளிக் குலுக்கும் துடியிடையை - கள்ளிருக்கும்
வண்டு விழியை வாளித்த பொன்னுடலை
தண்டை குலுங்கும் சதிரடியை - கண்டை
நோக்கிச் சிரிக்கும் நுண்ணமுதப் பண்மொழியை
தூக்கிச் சுமந்த தீம்பாடல் - ஆக்கிடவும்
சீதளத்தைச் சிந்திச் சிலுசிலுப்பைச் சிந்தையிலே
மோதவிட்டு மோகக் கிளர்வூட்டும் - காதலெனும்
நல்லுணர்வைச் சொல்லி நயந்திடவும் தீம்பனுவல்
வல்லவனும் வள்ளல் மறக்கவில்லை - எல்லாம்
கறையானைச் செத்தும் கவ்வுமிடம் கைவிடா
நிறையாரும் நெறியார்க் கேயன்றி - குறியின்றி
மூடாடு போல மனம்போன போக்கெல்லாம்
ஈடாடும் தீய இளைஞர்க்கோ - ஏடேந்தி
பள்ளி நடக்கும் பாங்கினிலே காளையுள்ம்
கிள்ளி நடந்து கிளர்வூட்டி - மெள்ளத்தான்
நாடாமல் விட்டு நலிய அவன் கைவிட்டு
ஓடேந்த வைக்கும் ஒண்டொடிக்கோ - பீடாரும்
வள்ளுவனார் பாக்கள் வாய்மலர்ந்து வைக்கவில்லை
கொள்ளை அறங்கள் கொழிக்கும் - உள்ளும்
திறஞ்சொல்லிச் சந்தி தெருவெல்லாம் வாழும்
குறளுக் கிணையுண்டோ கூறு.

## தேவரும் குறளும்

—ஆர். பி. ஹரன், கோப்பாய்.—

பகவத்கீதையில் கிருஷ்ண பகவான் "எப்பொழுதெல்லாம் அறம் அழிந்து மறம் மேலோங்குகிறதோ அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன்" எனக் கூறினார். அதுபோலவே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அறம் அழிந்து மறம் எழுந்தது. அப்பொழுது அறத்தை நிலைநாட்ட, அவதார புருஷராக, தமிழ் நாட்டிலே தமிழினத்திலே, தமிழ் மரபிலே, தமிழ்க்குடியிலே ஒரு ஞான ஒளி உதயமாகியது. அந்த ஞானஒளியே இன்று உலகமெல்லாம் போற்றும் திருவள்ளுவதேவராவர்.

இத்தகைய திருவள்ளுவர் தமிழ்ச் சூழலில், தமிழ்ப் பண்புகளுடன் வளர்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். தமிழ்நாடுதந்ததனிபேரறிஞர் திருவள்வர். இவரைத் தமிழ்நாடு தந்த நன்கொடைஎன்றே கருத வேண்டும். தமிழ்நாடு வள்ளுவரை தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல — உலகிலுள்ள அனைவர்க்குமே அளித்தது.

இதனைத் தேசியக்கவி பாரதி,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என அழகுறக் கூறினர்.

திருவள்ளுவர் தோன்றிய காலத்திலே தமிழ் நாட்டில் தமிழ்மொழி தன்நிலையில் குன்றாது நிலைத்தோங்கி இலங்கியிருந்தது. தொல்காப்பியம் என்னும் ஒப்புயர்வற்ற இலக்கணமும் அதற்கு இலக்கியமான பல சான்றோரது செய்யுள் நூல்களும் பல்கியிருந்தன. ஆனால் பிற்காலத்துத் தமிழமக்கள் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற நிலையை மறந்து பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பித்து பல்வேறு குலத்தினராக பிரிந்து வாழ்ந்தனர். வைணவம், சைவம், ஆருகதம், பௌத்தம், லோகாயதம் முதலிய பல்வேறு சமயங்களும் தம்முள் முரணிப் பரவியிருந்தன. இத்தகைய வேறுபாடு நாட்டின் நலத்திற்குப் பெருங் கேடுபயக்குமென்பதை உணர்ந்து நாட்டில் சாதி, சமயப் பிணக்குகளைப் போக்கி மீண்டும் பொது நோக்கும், சமதர்மமும், தழைத்தற்கு கருவியான ஒரு பொது மறையைத் தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டுமென்னும் சீரிய குறிக்கோளுடன் தமிழ் மறையாகிய திருக்குறளை இயற்றியருளினார். இதனை வள்ளுவரே,

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேய்ந்தலைக்கும்
கொல் குறும்பு மில்லது நாடு"

எனக் கூறினார்.

திருவள்ளுவதேவர் கடைச் சங்கத்தைச் சேர்ந்தவர். ஆனால் சங்கத்திலே அவர் புலவராக இருக்கவில்லை. சங்கப் புலவர்களில் கீரந்தையார் என்ற புலவர் இவரை,

"முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்
தெய்வத் திருவள்ளுவர்"

என தெய்வமாகப் போற்றுகிறார்.

இனி, இவரருளிய திருக்குறளானது சிந்தைக்கும், செவிக்கும், வந்த வினைக்கும், மருந்தாக இருக்கிறது. இந்த நூலில் 1330 அருங்குறள்கள் அடங்கியிருக்கின்றன. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலையுடையது. இந்நூலை உபநிடதம், மூவர் தமிழாகிய தேவாரங்கள், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம் வரிசையில் வைத்து மதிப்பளிக்கின்றார் ஔவையார். இவ்வரிசையில் கூறப்பட்ட நூல்கள் யாவும் ஒருமித்த கருத்தையே கொண்டிருந்ததலால் "ஒரு வாசகம்" என்று கூறினார். அவர் பாடிய அரிய

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கொழும்பு வந்தேன். தெருவிலே மிலிட்டரி நடமாட்டம் அதிகம். பீரங்கி மோட்டார்கள் கோட்டை வீதிகளில் சுற்றிக்கொண்டிருக்கின்றன. ஏன் இப்படி என்று விசாரித்ததில், அரசியல் நிலையிலே ஒருவித நெருக்கடி ஏற்பட்டிருப்பதால், யாரும் விஷமம் செய்யாமல் தடுக்கவே, இராணுவ மோட்டார்கள் பீரங்கிக்காவல் செய்வதாக சில நண்பர்கள் தெரிவித்தார்கள்.

கூட்டு அரசாங்கம் ஏற்படுவது சில அரசியல் வட்டாரங்களுக்குப் பிடிக்கவில்லையாம். அவர்கள் வகுப்புக் கலவரத்தை மீண்டும் கிளப்பிவிட முயற்சி செய்யக்கூடுமென்றும், இந்த விஷமத்தை முளையிலேயே கிள்ளிஎறிய அரசாங்கம் கண்காணிப்பாக இருப்பதாயும் தெரியவந்தது. இங்கு ஒரு பள்ளிக்கூடத்திலே வகுப்புதுவேஷம் சற்றேபுகைய ஆரம்பித்ததாம்.

மீண்டும் முன்மாதிரி ஏதும் கலகம் ஏற்படுமா என்று கேட்டேன். பிரதமர் சிறிமா பண்டாரநாயகாவின் ஆட்சியிலே இதுவரை வகுப்புக் கலகம் எதுவும் ஏற்படவில்லை. இனியும் அவ்வித விஷமம் தலைதூக்காதவாறு பிரதமர் கண்டிப்பான முன்னேற்பாடுகளைச் செய்வதாயும் தெரிவித்தார் ஒரு நண்பர். எப்படியோ அந்தச் சனியன் தலைதூக்காமல் அரசாங்கம் மட்டுமன்றி, நாட்டின் நன்மையை விரும்புபவரனைவரும் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்

* * *

திபேத்துக்கு ஏற்பட்ட ஆபத்து இலங்கைக்கும் ஏற்பட்டுள்ளதாயும், அதனால் இங்கு பௌத்தத்தைக் காக்க எல்லா முயற்சியும் செய்யவேண்டுமென்று கருத்துப்பட மல்வத்தை மகாநாயகதேரோ ஓர் எச்சரிக்கை செய்துள்ளாரல்லவா? அது இங்கு பல வட்டாரங்களிலும் அதிக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மல்வத்தை புதிய பீடாதிபர் நல்ல அறிவாளி. நிதானஸ்தர். அவரை வெளிமடையர் நேரில் சென்று கண்டபோது, எந்தக் கட்சி அரசியலிலும் பிக்குகள் கலந்துகொள்ளக் கூடாதென்றும், ஆட்சியிலுள்ள எந்த அரசாங்கத்தையும் ஆதரிப்பதே தமது கடமையென்றும் சொல்லியதால் அவரது மதிப்பு பொதுமக்களிடையே இப்போது பெரிதும் உயர்ந்துவிட்டது. அப்படிப்பட்டவர், திபேத்தைப்போல் இலங்கைக்கு ஆபத்துவந்துள்ளதாக எச்சரிக்கை செய்துள்ளாரெனின் அதற்கு என்னகாரணம்? இந்த ஆபத்தைத் தவிர்க்க என்ன செய்யவேண்டும்? என்பன போன்ற பல முக்கிய கேள்விகள் எழுகின்றன.

ஒன்றுமட்டும்கூறுவேன். எல்லாம் இறைவன் செயல். அவனையே நம்பிவாழ்பவர்களுக்கு ஒரு தீங்கும்வராது. இன்னும் பல கதைகள். நாளை சொல்லுகிறேன்.

* * *

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின் கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம் மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

— திருஞானசம்பந்தர்.

# அனுஷ்டானத்தில் இந்து உள்ள இந்து - பௌத்தவேறுபாடு

# இணைத்தால் இலங்கையில் இனவேறுபாடும் நீங்கிவிடும்

— நெவில் ஜயவீரா —
(அரசாங்கஅதிபர், யாழ்ப்பாணம்)

"பௌத்தத்தைப்பற்றி கட்டுரை எழுதும் ஆற்றல் எனக்கு இல்லையாயினும் சமய அனுபவங்கள் சம்பந்தமான சில எண்ணங்களை எழுதுவதற்கு இசைந்தேன்" என்று தெரிவிக்கும் அரசாங்க அதிபர் திரு. ஜயவீராவின் கட்டுரை இங்கு விச கதினத்தை முன்னிட்டு வெளியிடப்படுகிறது. இந்து மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் உள்ள அடிப்படை ஒற்றுமைகளைப்பற்றியும் அனுஷ்டான வேறுபாடுகளைப்பற்றியும் தெளிவாகவும் சுருக்கமாகவும் இக்கட்டுரை விளக்குகிறது.

வைசாக் தினம் மூன்று விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது. இஃது பௌத்த மதத்தினரால் நெடுங்காலமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. இந்நாள் புத்தர் பிறந்த தினமாகும். அவர் ஞானமடைந்ததும் முத்தி அடைந்ததும் இந்நாளில்தான்.

துன்பப்படுவோருக்கு அன்புப்பணி செய்வதே அவரது போதனைகளின் மெய்ப்பொருளாக இருந்தது. எல்லாத் துன்பங்களுக்கும் ஆசையே மூலகாரணம் எனக் கூறினர்.

உலகில் யாவுமே நிலையற்றதென்றும் இந்த நிலையாமை மீது நாம் கொள்ளும் ஆசையே துன்பங்களுக்கு அடிப்படையாக அமைகின்றது எனவும் அவர் கூறினர்.

இந்தத் துன்பத்திலிருந்து விடுபடவேண்டுமானால் மனிதர் இந் நிலையாமைகுறித்து விழிப்புறவேண்டும். தானே அழிந்து போகக்கூடிய நிலையாமைக்குட்பட்டவன் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். இந்த ஞானம் ஏற்பட்டால் ஆசைகள் அகன்று துன்பங்கள் மாண்டுபோகும்.

ஞானம் அடைவதற்கு அறிவு, நம்பிக்கை, கர்மயோகம் என மூன்று மார்க்கங்களை புத்தபிரான் கூறியிருக்கிறார். ஒழுக்க சித்தர்களுக்கே இவை கைகூடுவதாகும்.

இவற்றின் மூன்றாவதான கர்மயோகம் நூற்றுக்கு 90 வீதம் பௌத்த மதத்தினுல் அனுசரிக்கப்பட்டு வருகிறது. பற்றற்று நல்லசெயல்களைச் செய்வது யாவருக்கும் முடியுமானதொன்று.

ஆணவம் அல்லது தன்மை, மாயையிலிருந்துவிடுபடுவதற்கு பௌத்தமதத்தினர் அனுஷ்டிப்பதற்கென விதிக்கப்பட்டவிதிகளே பஞ்சசீலம் எனப்படும்.

தீவினைகள் — தீமைதருவன; நல்வினைகள்—நன்மைதருவன.

மனிதனின் தீவினைகளே அவர் தம் துன்பங்களுக்கு வித்தாக அமைகின்றது.

பௌத்தமதம், இந்துமதம், கிறிஸ்துமதம் ஆகிய எந்த மதத்தையும் நாம் சீர்தூக்கிப் பார்க்கையில் இரு விஷயங்களில் குழப்பமடைந்துவிடுகிறோம். சமயம் என்ற பதத்தை உபயோகிக்கும்போது இரண்டு முக்கிய அம்சங்கள் தெளிவாகின்றன. ஒன்று மதஸ்தாபகரால் தெளிவுபடுத்தப்பட்ட அடிப்படைத் தத்துவம் அல்லது புலன் கடந்த நுண்பொருள் ஆராய்ச்சி எனலாம். இது அந்த மதத்தின் தூய்மையான கோட்பாடேயாகும். மற்றது பலவருட அனுஷ்டானத்தால் அந்த மதத்தில் ஏற்படும் கலாச்சார, சமூக தாக்கவிளைவுகளாகும்.

மதங்களுக்கிடையேயுள்ள வேற்றுமை அனேகமாக மேற்குறித்த இரண்டாவது காரணத்தாலேதான் ஏற்படுகிறது என்று யான் கருதுகிறேன். கலாச்சார, சமூக, நாகரிக வேறுபாடுள்ள மக்களால் இந்துமதம் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது அவ் வேறுபாடுகளின் தாக்கம் அனுஷ்டானத்தைப் பெருமளவு பாதித்திருக்கிறது என்பது வெளிப்படை. எனவே மதவேறுபாடுகள் அவ்வவ் மதங்கள் வளர்ந்த புறச்சூழ்நிலையின் வேறுபாட்டினாலேயே ஏற்பட்டுள்ளன என்பது புலப்படும். மதங்களின் அடிப்படைத் தத்துவங்களை பிரமாணமாகக் கொண்டாராய்வோர் மதங்களிடையே வேறுபாடில்லை என்ற உண்மையை எழுத்தில் புரிந்துகொள்வர்.

இந்துமதம் பௌத்த மதத்தோடு பெருமளவில் இணைந்து செல்கின்றது. பொதுத்தன்மைகள் இரண்டு மதங்களுக்கிடையே நிறைய இருக்கின்றன. இரண்டு மதங்களினதும் வளர்ச்சி வரலாற்றில் மட்டுமின்றி அடிப்படைத் தத்துவ விளக்கத்திலகூட அவற்றிடையில் பெரிய ஒற்றுமை இருப்பதை யான் உணருகிறேன். இந்துமதத்தில் ஆன்மாவைப்பற்றிப பேசப்படுவது போலவே பௌத்தத்திலும் பேசப்படுகிறது. எல்லையில்லாத பிரமத்துடன் இணைவதாக இந்துமதம் விளம்புவதையே பௌத்தம், நிர்வாணம் என விளக்குகிறது. எல்லை கடந்த ஒரு பொருள் உள்ளதென்பதையும் அதுவே உலக தோற்றத்துக்குக் காரணமென்பதையும் அது மனிதனது உள்ளத்தைக் கடந்தது என்பதையும் ஒருபோதும் புத்தபகவான் மறுத்ததில்லை. மனித மனம் கடவுளது உருவத்தை உருவகப்படுத்த முடிவதில்லை. ஏனெனில் கடவுளுக்குரியனவாகக் கருதப்படும் குணங்கள் மனிதனுக்கு இருப்பதில்லை. இந்த உண்மையை இந்துமதமும் ஏற்றுக்கொள்கிறது. அது பிரமத்தை வர்ணித்ததில்லை. அது பிரமத்தைப்பற்றிச் சொல்வதெல்லாம் "நேதி, நேதி" என்பது மட்டுமே. இதுவல்ல, இதுவல்ல என்று மறுப்பதன்மூலம் அது எது என்பதை ஒவ்வொருவரது கற்பனைக்கும் விட்டுவிடுகிறது.

அர்ச்சனனுக்கு கண்ணன் உபதேசித்ததாகச் சொல்லப்படும் பகவத்கீதையிலே குறிப்பிடப்படும் மூன்று முக்கிய உண்மைகள் பகவான் புத்தராலும் நிர்வணத்தை அடையும் மார்க்கத்துக்கு அத்தியாவசியமானதாக வலியுறுத்தப்பட்டுள்ளன. மனதை அடக்கியவர்களுக்கே அறிவு சித்திக்கிறது என பௌத்தம் போதிக்கிறது. பெரும்பான்மையான இந்துக்கள் பகதியைமுத்தியடைவதற்குரிய மார்க்கமாகக்கொள்கிறார்கள். இந்து மதத்தில் நிலவுகின்ற சடங்குளும் சம்பிரதாயங்களும் 'பக்தி' அம்மதத்தில் வகிககும முககிய ஸ்தானத்தில் சுட்டிக காட்டுகின்றது.

இந்துமதமும் பௌத்தமதமும் தத்துவ விசாரணையில் அடிப்படையில் ஒன்று என்பதையே யான் இங்கு வலியுறுத்த முனைகிறேன். இன்றைய நோககில் இலங்கை வாழ் மககளாகிய நாங்கள் மத ஒற்றுமையை வளர்கக வேண்டுவது அத்தியாவசியமாகும். பௌத்தர்களது முருக வழிபாடு "பகதி" மார்ககத்துககு மட்டும் உதவுவதோடல்லாமல் இந்து பௌத்த மதங்களின் இணைப்புககும் உதவவேண்டுமென்று விரும்புகிறேன். இத்தகையதொரு இணைப்பு ஏற்படுமாயின் இலங்கை வாழ் இரு சமூகங்களும் இணைவதற்கான சாத்தியககூறுகள் ஏற்படலாம்.

பகவான் புத்தரின் போதனை

## "அல்லல்படுவோரின் துன்பம் களையவேண்டும்"

பணத்திலும் புலன் இன்பங்களிலும் அரசர்களுக்கு ஆசை இருநதுவந்தது. அவற்றை நீக்கும்பொருட்டு தேதவன மன்னர் பிரசேன தித்தருக்கு புத்தபிரான் உபதேசம் செய்தார். அவற்றில் சில வருமாறு:-

நமது நற்செயல்களும் தீச்செயல்களும் நம்மைவிட்டு நீங்காமல் நிழல்களைப் போலத் தொடர்ந்து கொண்டேயிருப்பவை.

அன்புள்ள இதயமே முதற்கண் அவசியமாகும்.

நாம் ஓரேமகனைப்பெற்றிருந்தால், அவனை எப்படிப் பேணுவோமோ அவ்வாறே உமது குடிகளைப் பேணவேண்டும். அவர்களைக் கொடுமைப்படுத்த வேண்டாம். அவர்களை அழிக்க வேண்டாம்! உமது புலன்களையெல்லாம் அடக்கி வைத்துக்கொள்ளவேண்டும். நீதியற்ற சமயக் கொள்கைகளைக் கைவிட்டு நேரான பாதையிலே நடக்கவேண்டும். மற்றவர்களைத் தாழ்த்தி நசுக்கி நீர் மேலெழ எண்ணக்கூடாது. அல்லற் படுவோர்க்கு ஆறுதல் கூறி, அவர்களுடைய துன்பம் களையத் துணைபுரியுங்கள்!

மன்னர் பதவி என்ற மாட்சியில் செருக்கடைய வேண்டாம்; இச்சகம் பேசுவோரின் இனிய வார்த்தைகளுக்குச் செவி சாய்க்கவேண்டாம்!

கடுமையான தவங்களை மேற்கொண்டு ஒருவர் துயரப்படுவதில் பயனில்லை. புத்தரைப்பற்றியும் அவர் போதிக்கும் நீதியான தர்மத்தைப் பற்றியும் சிந்தனை செய்து பார்க்கவும்.

பிறப்பு, முதுமை, பிணி, மரணம் ஆகிய பாறைகள் நாலு புறங்களிலும் நம்மைச் சூழ்ந்து நெருங்கிநிற்கின்றன. இந்தத் துக்க மலையிலிருந்து தப்புவதற்கு உண்மையான தருமத்தை அறிந்து பின்பற்றுதல் ஒன்றே வழியாகும்.

அறிவு பெற்றவர் அனைவரும் உடல் இன்பங்களை ஒதுக்குகின்றனர். அவர்கள் தங்கள் நற்பண்புகளை வளர்த்துக் கொள்வதற்காகக் காமங்களை வெறுத்துத் தள்ளுகின்றனர்.

மரம் தீப்பற்றி எரியும் போது புள்ளினங்கள் அதன் மீது குடியிருக்க முடியுமா? ஆசைகளால் ஏற்படும் சித்த விகாரமுள்ள இடத்திலே சத்தியம் தங்கியிருக்க முடியாது. இதையறியாத கல்விமானை பெரிய முனி என்று பாராட்டினால் அவன் பேதையேயாவான்.

இதை அறிந்தவனுக்கு ஞானம் உதயமாகின்றது. இந்த ஞானத்தைப் பெறுவது ஒன்றே உயர்ந்த இலட்சியம். இதை அலட்சியம் செய்துவிட்டால் வாழ்வே பயனற்றுப்போகும்.

காமமாகிய வெள்ளம் யாவர்க்கும் அபாயம் விளைக்கும், உலகத்தையே அது அடித்துககொண்டு போய்விடுகின்றது. அதன் சுழல்களிலே சிக்கியவனுககு மீட்சி பெற வழியில்லை. ஆனால் ஞானம் என்னும் ஓடம் அந்த வெள்ளத்திலிருந்து காககும். ஆழ்ந்த தியானமே அதன் துடுப்பு.

நாம் நம்செயல்களின் பயன்களிலிருந்து தப்பமுடியாது. ஆதலால் நல்வினைகளையே நாம் செய்துவரவேண்டும்.

நம் சிந்தனைகளைத் துருவிப் பார்க்கவேண்டும், அவற்றால் தீயசெயல்கள் விளைந்துவிடாமல் கவனிக்கவேண்டும். ஏனெனில் நாம் விதைப்பதை நாமே அறுவடை செய்யவேண்டியிருக்கும்,

ஒளியிலிருந்து இருளுக்குச் செல்வதற்கும், இருளிலிருந்து ஒளிக்குச் செல்வதற்கும் வழிகள் இருக்கின்றன. இருளிலிருந்து அதிக இருளுக்கும், ஒளியிலிருந்து அதிக ஒளிக்குப் போவதற்கும் வழிகள் இருக்கின்றன. ஞானி அதிக ஒளியைப் பெறுவதற்குத் தன்னிடமுள்ள ஒளியைப் பயன்படுத்திக்கொள்வான். எப்போதும் அவன் உண்மையை உணர்ந்து கொள்வதற்காக இடைவிடாமல் முன்னேறிக் கொண்டேயிருப்பான்.

நல்லொழுக்கத்தாலும், ஆராய்ச்சி அறிவாலுமே, உமது மேன்மையைக் காட்டவேண்டும். உலகப் பொருள்களின் போலித் தன்மையைப்பற்றிச் சிந்தித்துப்பார்க்கவும். சிந்தித்து வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை உணர்ந்து கொள்ளவும்.

உள்ளத்தை மேல்நிலைக்கு உயர்த்துக! உறுதியுடன் உண்மையான தன்மையை நாடுக! மன்னர்க்குரிய கடமைகளைப் புறக்கணிக்கவேண்டாம், உமது இன்பம் வெளிப் பொருள்களைச் சார்ந்திருக்கவேண்டாம். உமது உள்ளத்திலிருந்தே அது வளரவேண்டும். இவ்வாறு நடந்துகொண்டால் உலகத்திலே நெடுங்காலம் உமது நற்பெயர் நிலைத்து நிற்கும். சுதாகதருடைய அருளும் கிடைக்கும்.

## பிக்குகளுக்கு உபதேசம்

என் பிக்குகளிடையே இப்பொழுதோ அல்லது நான் மரித்த பிறகோ, எவர்கள் தமக்குத் தாமேதீபமாயும், வெளியே எவ்வித உதவியும் தேடாமல், தமக்குத் தாமே அடைக்கலமாயும் சத்தியத்தையே தீபமாகப் பற்றிக் கொண்டும், தம்மைத் தவிர வெளியே எவரிடமும் அடைக்கலத்தை நாடாமலும் இருக்கின்றார்களோ வர்களே (இலட்சிய) சிகரத்தை அடைவார்கள். ஆனால் அவர்கள் கற்கவேண்டியதில் ஆர்வத்தோடு இருக்கவேண்டும்.

* * *

ஒரு பிக்கு உடலோடு வாழும் காலத்தில் இடைவிடாத முயற்சியுடனும், கருத்துடனும், உறுதியுடனும் தாம் உலகில் இருக்கும் போதே, உடலின் ஆசைகளிலிருந்து தோன்றும் துக்கத்தை வெல்லத் தக்க முறையில் உடலைப் பற்றிப் பாவனை செய்துகொள்ள வேண்டும்.

* * *

சத்தியத்தையே தீபமாக உறுதியுடன் பற்றிக்கொள்ளுங்கள். சத்தியத்தையே அடைக்கலமாக உறுதியுடன் பற்றிக்கொள்ளுங்கள். உங்களைத்தவிர வேறு சரணடைய வேண்டிய எவரையும் நாடவேண்டாம்.

—பகவான் புத்தர்

## பௌத்த அகதிகள் இலங்கை கவலை

கொழும்பு. ஞாயிறு

கிழக்குப பாகிஸ்தானிலிருந்து பௌத்தர்கள் அகதிகளாக வெளியேறி இந்தியாவுக்கு வந்து தஞ்சம்புகுந்துள்ளது பற்றி இலங்கை அரசாங்கம் பாகிஸ்தான் அரசாங்கத்திடம் தனது கவலையைத் தெரிவித்துள்ளதாக அறியபபடுகிறது.

இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் திரு. ஷேர்லி அமரசிங்கா அகதிகள் முகாமுக்குச் சென்று பார்வையிட்டுள்ளார். பௌத்த அகதிகளின் புள்ளி விபரங்கள் எடுத்து அனுப்புமாறு அரசாங்கம் ஹைகமிஷனரைக் கேட்டுள்ளது.

## பயங்கர வெறியன்

பஹாமா, மே 24

தனது நண்பன் ஒருவனின் துப்பாக்கியைப் பறித்து ஏழு பேரைச் சுட்டுக் கொன்று, ஆறுபேரைக் காயப்படுத்திவிட்டுத் தன்னையும் சுட்டுக் கொண்டான் ஒரு பயங்கர நீக்ரோ வெறியன்.

இந்தப் பயங்கர நிகழ்ச்சியைக் கண்டு அஞ்சி நடுங்கிய பலர் தங்களைக் காப்பாற்றும்படி பொலிசுக்கு டெலிபோன் செய்தார்கள்.

இவனுடைய வெறிக்கு இவனின் மனைவி, மைத்துனன், மகன் இன்னும்பலர் ஆளானார்கள்.

## தேவரும்: . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடல் இதோ:-

"தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென் றுணர்"

எனவே, தமிழராகிய நாம் எம்மதத்தினர்களும், எத்தேசத்தவர்க்கும், எச்சாதியினர்க்கும், பொதுமறையான தமிழ் மறையை ஓதி உய்ய வேண்டும். அதனைத் தந்த மனிதரில் தேவரான வள்ளுவரைக்கனவிலும்நனவிலும்வணங்கி அவர் தம் குறளை வையகமெல்லாம் வாரியிறைக்க முன்வரலவசியம்,

## ஜோன்சனின் உயரிய நோக்கம்

வாஷிங்டன், மே 24

இன ஒதுக்கலும் பசிப்பிணியும் அற்ற சமுதாயத்தை உருவாக்குவதில் மக்கள் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமென அமெரிக்க ஜனதிபதி திரு. லிண்டன் ஜோன்சன் மெக்சிக்கன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்கான தமது அறிக்கையில் எடுத்துக் கூறியுள்ளார்.

உயர்ந்த நோக்கத்துடன் மக்கள் வாழ்வதே முக்கியம் என்றும் அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஆசிரியருக்கு வேலை கிடைக்கும்
### மந்திரி வாக்குறுதி

உடுப்பிட்டி, ஞாயிறு

தமிழ் ஆசிரியர் தராதரம் பெற்ற வேலையற்ற ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழுவொன்று சென்ற வெள்ளிக்கிழமை உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் கல்விமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லையைச் சந்தித்துத் தங்களுக்கு விரைவில் நியமனமளிக்கும்படி கேட்டுக்கொண்டது.

இக்குழுவினருக்குப் பதிலளித்த கல்விமந்திரி 1-1-65-ல் கட்டாயம் நியமனம் வழங்குவதாக உறுதி கூறினர். இப்பேட்டியின்போது கல்வித் தலைமைக் காரியாலய அதிகாரி திரு வி. துரைசிங்கம் பிரசன்னமாகவிருந்தார்.

## அதிகநாள் வாழ விரும்பும் நேரு

புதுடில்லி, மே 24

"எனது வாழ்நாள் அவ்வளவு விரைவில் முடியப்போவதின்லை" என இந்தியப் பிரதமர் திரு. நேரு தெரிவித்துள்ளார்.

"உங்கள் வாழ்நாளிலேயே தாங்கள் வகிக்கும் ஸ்தானத்துக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டாமா?" என நிருபர்கள் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. நேரு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## "கல்வி நிர்வாக ஒழுங்கை மாற்றுதல் சரியல்ல"
### உரும்பராய் இந்துக் கல்லூரி அதிபர் கருத்து

யாழ்ப்பாணம், திங்கள்

தற்காலத்தில் மாணவரின் தரம், ஒழுக்கநிலை, கட்டுப்பாடு ஆகியவை நிலை குலைந்திருும்பதாக நிலவும் அபிப்பிராயம் சரியானதல்லவென்றும், இலவசக் கல்வியினுல் மாணவர்களின் தொகை மிகப் பெருகியுள்ளதென்றும், அப்பெருக்கத்தைச் சமாளிக்கக் கூடிய வகையில் பலதரப்பட்ட ஒரு கல்வித்திட்டம் அமுலுக்கு வராததே காரணமென்றும், உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஏ. வைத்திலிங்கம் நேற்று மாலை தமது கல்லூரியின் பரிசளிப்புவிழாவிற் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டார்.

திரு. வைத்திலிங்கம் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:

எவ்விதத்தில் எமது கல்வி முறை மாற்றப்படவேண்டுமென்று நாம் சிந்திக்க வேண்டும். கல்வி இலாகாவினுல் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கைல் எமது பணியை இலகுவாக்குகின்றது. அந்த அறிக்கையிக் நாம் வரவேற்கக் கூடிய அம்சங்கள் உள எனினும் அதிலடங்கியுள்ள சில விஷயங்களைப் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேம்.

எமது பாடசாலைகளைப் பாலர்பிரிவு முதல் 8-ம் வகுப்பு வரையுடைய அடிப்படைப் பாடசாலைகளாகவும், ஆரம்ப ஜி. சி. ஈ. வகுப்புடன் ஆரம்பமாகும் மகாவித்தியாலயங்களாகவும் பிரிக்க வேண்டுமென வெள்ளை அறிக்கை சிபார்சு செய்கின்றது. இதனை எமது பிரதேசத்தில் நடைமுறைக்குக் கொண்டு வருவது மிகவும் கஷ்டமாக இருக்கும். கீழ் வகுப்புகளையும் அடக்கியிருப்பதாற்ருன் எமது பெரிய பாடசாலைகள் உயர்ந்த நிலைக்கு வளர்ந்தன. இதனுல் இப்பாடசாலைகள் ஒரு பாரம்பரியத்தை உண்டுபண்ணின. இந்நிலையை மாற்றுவதனுல் இப்பாடசாலைகளின் கல்வித்தரம் குறைவதுடன் மாணவரின் முன்னேற்றமும் பெரிதளவு பாதிக்கப்படும். ஓரிடத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடசாலைகள் இருக்கிறபடியால் பணம் வீணுக விரயஞ் செய்யப்படுகிறது என்று சிலர் கூறக்கூடும். ஆனுல் இதைக் காரணமாகக் காட்டி நன்ருக வளர்ந்து வந்த பாடசாலைகளின் கல்வி நிர்வாக ஒழுங்கை மாற்றுவது புத்திசாலித்தனமா?

எல்லாப் பாடசாலைகளிலும் பலதரப்பட்ட கல்வி (விஞ்ஞானம், பொறியியல், கலை, விவசாயம்) போதிக்கமுடியும் என்று வெள்ளையறிக்கை கூறுவது மிகவும் விரும்பத்தக்க காரியமாகும். இதை நாம் வரவேற்கின்றேம்.

### பாடசாலைகளின் தரமும் நிலையும்

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் குறைந்த பிள்ளைகளின் தொகைக்கு ஏற்ப ஏனைய பிராந்தியங்களிலும் பார்க்கக் கூடிய முன்னேற்றமடைந்த பாடசாலைகள் உண்டென்றும் இப்பிரதேசத்தில் பாடசாலைகளின் புனரமைப்பு முதலிற் செய்யப்படும் என்றும் பத்திரிகையில் ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது எவ்வளவுக்கு உண்மை என்று நாம் கூற முடியாது. ஆயின் அச்செய்தி உண்மையானுல், இப்பிரதேசப் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையுள்ள எல்லோரும் விழிப்பாயிருக்கவேண்டும். எம் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் முன்னேற்றத்தையிட்டு நாம் பெருமைப்படுகிறேம். அவற்றின் நிலையை மேலும் உயர்த்த விரும்புகிறேம். எமது பாடசாலைகளின் நிலையைக் குறைக்காமல் ஏனைய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளின் தரத்தையும், நிலையையும் உயர்த்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

பாடசாலைகளின் முன்னேற்றத்துக்கு உதவி செய்வதற்காக நலம்புரி சபைகள் அமைக்கப்படவேண்டுமென்றும், அவற்றில் பழைய மாணவர், பெற்ருேர், ஆசிரியர், ஸ்தலஸ்தாபன சபைகளின் பிரதிநிதிகளும் இடம் பெறுவார்களென்றும் வெள்ளை அறிக்கை கூறுகிறது. இவ்விதமான சபைகள் வரவேற்கத்தக்கனவே.

பலதரப்பட்ட தொழில்நுட்ப விவசாயப் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டுமென வெள்ளை அறிக்கை கூறுகின்றது. இதை நாம் வரவேற்பதுடன், தாமதமின்றி அவைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேம். ஆயின் அதுவரையில் இன்றியங்கும் பாடசாலைகளிலிருந்து மாணவர்களை வெளியேற்றுவதை யார்தாம்விரும்புவர்?

பொதுவாகக் கூறின் 1945ம் ஆண்டில் இலவசக் கல்வித் திட்டம் அமுலுக்கு வந்ததனுற் பாடசாலை மாணவரின் தொகை பன்மடங்கு அதிகரித்துள்ளது. இப்பெருக்கத்தைச் சமாளிக்கக் கூடியவகையில் பலதரப்பட்ட ஒரு கல்வி முறைத் திட்டம் அமுலுக்கு வந்திருக்க வேண்டும். அவ்விதத்திட்டம் இன்னும் நடைமுறையில் வரவில்லை. அதற்காக, தகுதியற்றவர்களென்று ஒரு சில மாணவரைப் பிரித்து அவர்களை இன்றைய பாடசாலைகளிலிருந்து வெளியேற்றுவது புத்திசாலித்தனமான காரியமாக இருக்க முடியாது.

ஆகவே, இப்பிரச்னையைத் தடுப்பதற்காகச் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் (அரசாங்கம், பெற்ருேர், ஆசிரியர், பல்கலைக்கழகப் பிரமுகர்கள் ஆகியோர்) ஒத்துழைக்க வேண்டும்.

## லாவோஸ் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லைகள் நடத்தியதாக கூறப்படுகிறது.

### தாய்லாந்தில்

லாவோஸ் நெருக்கடியினுல் தமது நாட்டைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டுள்ளதென்று தாய்லாந்து பிரதமர் அறிவித்துள்ளார்.

தமது நாட்டுக்கு துருப்புக்களை அனுப்ப அமெரிக்கா தயாராகவிருக்கிறதென்றும் அமெரிக்க துருப்புகளின் அவசியம் இப்பொழுது ஏற்படாதபொழுதிலும் சந்தர்ப்பம்வரும் சமயத்தில் அமெரிக்கத் துருப்புகள் இங்கு வரவழைக்கப்படுமென்றும் கூறினர்.

### பதட்லாவோ தலைவர் கோரிக்கை

தாக்குதல்கள் நடத்திவரும் பதட்லாவோ பிரதமர், சமாதான பேச்சுக்கள் நடத்த வரும்படி இளவரசர் சுவர்ணபூமாவைக் கேட்டுள்ளார். ஆனுல் சமரசமான யோசனைகள் எதையும் பதட்லாவோ பிரதமர் வெளியிடவில்லையென்று வியண்டையின் செய்திகள் கூறுகின்றன.

## திருவிழா

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை நாரந்தனை கந்தசுவாமி ஆலய ஒன்பதாம் திருவிழா இன்றுஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. பகல் விசேட அபிஷேகமும், மாலை வேட்டைத் திருவிழாவும், இரவு பெரிய சப்பறத்திருவிழாவும் நடைபெற்றன.

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் தேர்த்திருவிழாவுடன் மகோற்சவம் முடிவடையும்.


# தேசிய சுவீப்

போனல் 50 சதம், வந்தால் ரூபா 50,000
இன்னும் 102 பரிசுகள் உண்டு
ஏகவிநியோகஸ்தர்கள் (CHIEF ORGANISER)

## கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ்

நல்லூர் – யாழ்ப்பாணம்.
(பதிவு இலக்கம் 3948)

ஸ்தபிதாம்: 1930
தந்தி: "சீதேவி"

34 ஆண்டுகள் சேவை
தொலைபேசி: 461

- உள் நாட்டு நகைத் தொழில் நகைகளை ஆதரியுங்கள்!
- தங்கப்பவுண் நகைகளுக்கு உத்தரவாதம்!
- எங்களிடம் வேண்டிய நகைகளை பில்லுடன் வந்தால் திருப்பப் பெற்றுக்கொள்வோம்!
- குறிப்பிட்ட டிசைன் ஒருசோடி தங்கப்பவுண் வளையல் கூலி ரூபா 5 மட்டும்!

உடன் விஜயம் செய்யுங்கள்!

உலக நாடுகளின் முன்னணியில் 1952-ல் கொழும்பு பிளான் பொருட்காட்சியில் முதல் பரிசும் தங்கப் பதக்கமும் பெற்றவர்கள்.




எவ்வித டிசைன்களும் குறித்த தவணையில் செய்துகொடுக்கத் தயார்.

### முக்கிய கவனிப்பு

மாதாந்தப் பணத்தைச் சேமித்து
ஆபரணங்கள் செய்விக்கும் முறை ஒன்றைத் தயார் செய்துள்ளோம்.
உடன் நேரில் ஆலோசியுங்கள்.

### தேசிய சுவீப்

விற்பதற்கு யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும் சப்-ஏஜன்ற் தேவை.
தகுந்த கொமிஷன் கொடுக்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும்

# வள்ளுவர் தினத்தில் அல்வாயில் முத்தமிழ் விழா

உடுப்பிட்டி, திங்கள்

திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு அல்வை வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோவில் வடக்கு வீதியிலமைந்த 'சோமு அரங்கில்' இன்று திங்கட்கிழமை அல்வை வள்ளுவர் கலைமன்றத்தினரின் ஆதரவில் முன்னாள் உதவி வித்தியாதிபதி திரு. க. ச. அருள்நந்தி தலைமையில் முத்தமிழ் விழா நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் இலங்கை எழுத்தாளர் சங்கத் தலைவரான திரு. சீ. ஸ்ரீநிவாசன் 'கலித்தொகையில் சில குறிஞ்சிக் காட்சிகள்' பற்றி சொற்பொழிவாற்றுவார்.

இசைமணி கார்த்திகேசனின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் மாலை 7 மணியளவில் விழா ஆரம்பமாகும்.

தலைமையாசிரியர் திரு. க. கந்தப்புவின் வரவேற்புரையையடுத்து தலைமைப் பேருரை நிகழும் 'முப்பால்' என்பது பற்றி சைவப்புலவர் திரு. ஈ. சி. குலரத்தினமும், 'இல்லற இன்பம்' என்பது பற்றி திரு. வ. சிவராசனும், 'வள்ளுவரின் சமயக் கொள்கை' பற்றி செல்வி ஆ. வள்ளியம்மைப் பிள்ளையும், '1330-ல் மூன்று' என்பது பற்றி திரு. க. கணபதிப்பிள்ளையும், 'வள்ளுவர்' என்பது பற்றி பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளையும் சொற்பொழிவாற்றுவார்கள்.

'மேலைநாடுகளில் திருக்குறள்' என்பது பற்றி தமிழ் மறைக் கழகத்தலைவர் பண்டிதர் க.பொ. இரத்தினம் சொற்பொழிவாற்றுவார்.

கலை நிகழ்ச்சிகளுக்கு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமைவகித்து ஆரம்பித்து வைப்பார்.

அல்வை அம்பிகா பாடசாலை மாணவர்களின் "ஆடல் பாடலும்" அடையாறு சங்கீத பூஷணம் செல்வி தங்கராணி கனகசபையின் இன்னிசைக் கச்சேரியும், தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவிகளின் கோபிகா நடனமும், நவநாத விநோதன் ப. தியாகர்ராசாவின் பல் கலைவிருந்தும் நடைபெறும்.

மன்றத் தலைவர் திரு. க. வயிரமுத்து பரிசில் வழங்குவார்.

இறுதியில் பஞ்சு குழுவினரின் 'தியாகி' 'கல்யாணம் நம். 2' ஆகிய இரு சமூக நாடகங்களும் நடைபெறும்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### திங்கள் 25-5-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 விசாகப்பாடல்கள், 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-00 விசாக செய்தி, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-55 வீணை — கமலா கிருஷ்ணமூர்த்தி, 7-15 கே. மகாலிங்கம் — பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு — பௌத்த சித்தாந்தம் — ஆ. வி. மயில்வாகனம், 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 பேச்சு — 'விசாகதினம்' — டாக்டர் ஜி. பி. மலலசேகரா, 10-00 நேயர் விருப்பம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 என். காமாட்சி — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 ராமநாதபுரம் எம். என். நடராஜபிள்ளை — புல்லாங்குழல், 1-30 வாத்திய இசை, 1-50 கதம்பம், 2-10 என். காமாட்சி — பாட்டு.

மாலை 5-15 திரைப்பட இசை.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள், 7-40 இசைக் கோவை, 9-30 மதுரை மாரியப்பசாமி — பாட்டு.

## எதிரிகளுக்கு 500 ரூபா பிணை

### அல்லைப்பிட்டி கலவரவழக்கு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

தேர்தல் சம்பந்தமாக இரு கோஷ்டியினரிடையே நடைபெற்றதாகக் கூறப்படும் கலவர வழக்கு நேற்று பதில் நீதிபதி திரு. நவரத்தினராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அல்லைப்பிட்டி வாசியான கபிரியல் நட்சத்திரம், லோறன் அருக்காஞ்சி, வைத்தி அருளானந்தன், நீக்கிலான் பொனிப்பாஸ் அந்தோனியக்கரசு, சுவாளி அகஸ்தீன், சுவாளி கீதப்பொங்கலன் ஆகிய ஏழுபேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜராகினர். எதிரிகள் சார்பில் புறக்டர் ஆர். விசுவநாதன், புறக்டர் எஸ். வி. கதிரவேலு ஆகிய இருவரும் ஏற்பட்டிருந்தனர்.

பதில் நீதிபதி திரு. நவரத்தினராசா எதிரிகளை தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மேல்விசாரணையை இம்மாதம் 28-ந் திகதிக்கு ஒத்திவைத்து இருதரப்பினரும் சச்சரவின்றி அமைதியாக இருக்கவேண்டுமெனவும் எச்சரிக்கை செய்தார்.

## கரபந்தாட்ட போட்டி

### சுகாதாரவாரவிழா ஆதரவில் நடைபெறுகிறது!

யாழ்ப்பாணம், திங்கள்

கோப்பாய் மக்கள் சுகாதார வாரவிழாவின் ஆதரவில், அடுத்தவாரம் எட்டாம் திகதி தொடக்கம் பதினன்காம் திகதி வரை கர பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கோப்பாய் மகா வித்தியாலய பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருக்கும் இக் கர பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை வே. செல்லத்துரை, அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். விண்ணப்பங்களை நேரிலும் சமர்ப்பிக்கலாம்.

## வானொலி திருட்டு வழக்கு ஒத்திவைப்பு

ஊர்காவற்றுறை, சனி

அல்லைப்பிட்டி வாசீசர் சன சமூக நிலையத்திற்குச் சொந்தமான வானொலியைக்களவாடியதாக அதே ஊரைச் சேர்ந்த அருணாசலம் குகானந்தன், செல்லையா சோமு ஆகிய இருவர் மீதும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று பதில் நீதிபதி திரு. நவரத்தினராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டதும் பதில் நீதிபதி திரு. நவரத்தினராசா இரண்டாம் எதிரியை 250ரூபா பிணையில்செல்ல அனுமதித்து மேல் விசாரணையை ஜூலை மாதம் 2-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# "தேசிய விளையாட்டுகளுக்கு புத்துயிர் அளிக்கவேண்டும்"

## பரிசளிப்பு விழாவில் பேச்சு

சுழிபுரம், ஞாயிறு

வழுக்கம்பரை சனசமூக நிலைய தாச்சி சுற்றுப்போட்டி விழா சமூகஜோதி திரு. சி. தியாகராசா தலைமையில் வழுக்கம்பரை அம்மன்கோவில் வீதியில் நடைபெற்றது. தலைமையுரையில் திரு. சி. தியாகராசா பேசுகையில் கூறியதாவது:

"தேசிய விளையாட்டுகள் மூலம் சமூக ஒற்றுமையையும் நல்ல முன்னேற்றமான திடகாத்திர வீரர்களையும் நாம் தெரிவு செய்யலாம். தேசிய விளையாட்டுகளான தாச்சி, கிட்டிஅடித்தல், வாரோடுதல் போன்றவற்றை ஒவ்வோர் கல்லூரிகளிலும் கட்டாயமாகப் போதிக்க வேண்டும். இன்று கல்லூரிகளில் நடைபெறும் மேலநாட்டு விளையாட்டுகளிலும் பார்க்க தேசிய விளையாட்டுகளை அதிகபணச்செலவு இல்லாமல் நடத்தலாம். ஒவ்வோர் பாடசாலையிலும் கல்லூரியில் தேசிய விளையாட்டுகளை நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து நடவடிகளை எடுக்கும்படி கல்விமந்திரியைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தேசிய விளையாட்டுகளுக்கு புத்துயிர் கொடுக்கும் பணியில் சனசமூகநிலையங்கள் முன்வந்து பணியாற்றுவது மிகவும் பாராட்டத்தக்கதாகும். சன சமூகநிலையம் செய்யும் இப் பணியை எல்லா நிலையங்களும் பின்பற்ற வேண்டும்."

சங்கானை கிராமசபை முன்னாள் தலைவர் திரு. ச. சம்பந்தமூர்த்தி பேசுகையில் அழிந்து போகும் தேசிய விளையாட்டுகளை அழியவிடாது, பாதுகாத்து மேலும் வளர்ச்சியடையச் செய்ய பாடுபடும் சனசமூகநிலையத்தின் சேவையை பாராட்டுவதுடன் ஊக்கமும் கொடுக்க வேண்டும் என்றும் முன்பு தேசிய விளையாட்டின் ஒன்றான காளைமாடு அடக்கும் போட்டியில் வெற்றியடைபவனுக்கே பெண் கொடுத்து திருமணம் செய்து வைத்தார்கள், இன்று நாம் மேல்நாட்டு நாகரிகத்தில் மோகம் கொண்டு மேல்நாட்டவர்களின் விளையாட்டுகளைப் பின்பற்றி எமது விளையாட்டுகளைக் கைவிட்டுவிட்டோம் என்றும் இந்த நிலைமை மாறி எமது தேசிய விளையாட்டுகளுக்கு புத்துயிர் கொடுக்கவேண்டும் என்றும் கூறினர்.

திரு. க. வாமதேவன் பேசுகையில் போட்டியில் கலந்து ஒருவர் வெற்றியடைதற்கு மூலகாரணமாக இருப்பவர் தோல்வியடைந்தவரே என்று கூறினர். திரு. கதுரைசிங்கம் பேசுகையில் மேலைத்தேச விளையாட்டுகளை விட்டு எமது தேசிய விளையாட்டுகளைக் கைக்கொள்ள வேண்டும் என்று கூறினர். தாச்சிப்போட்டியில் வெற்றிபெற்ற கோஷ்டிக்கு திரு. சி. தியாகராசா பரிசு வழங்கினர்.


# ஒரு பானை சோற்றுக்கு இதோ ஒரு சோறு

### ★ சக்தி பிறக்கிறது

இயற்கை அன்னையின் மடியில் மறைபொருளாக அடங்கியிருக்கும் பல் வேறு சக்திகளைத் தேவைக்கேற்றபடி கட்டுப்பாட்டுடன் வெளியேற்றிக் குற்றேவல் செய்விக்கின்றன பொறிநுட்ப எந்திரங்கள்.

இந்த அடிப்படைச் சக்தி மாற்றங்களே (transformation of energy) நவீன வாழ்க்கையின் ஆதார சுருதி. சக்தி மாற்றத்திற் பொதிந்திருக்கும் தத்துவம் என்ன? இயந்திரங்கள் இத் தத்துவத்தை எப்படி நடைமுறையிலே செயற்படுத்தி வருகின்றன? இந்தக் கேள்விக்குப் பதிலிறுப்பதே கட்டுரைத் தொடரின் நோக்கம். இந்தத் தொடரில் (1) நீராவி எந்திரம், (2) டீசல் பெற்றோல், இயந்திரங்கள். (3) மின் மோட்டார்கள், (4) அணு உலை (atomic reactor) முதலியவை அடங்கும்.

### ★ சலரோகம்

சலரோகமுள்ளவர்களின் இரத்தத்தில் அளவுக்கதிகமாகச் சீனி உள்ளது. இரத்தத்திலுள்ள சீனி அதிகரிக்காமற் செய்வது சதையம் (pancreas) என்ற சுரப்பியிலிருந்து ஊறும் இன்சுலின் என்ற சுரப்பு. குறைந்த அளவு இன்சுலின் சுரக்கப்பட்டால், அல்லது இன்சுலினுடைய தன்மை குறைந்திருந்தால் இரத்தத்திலுள்ள சீனி அளவுக்கு மேலதிகமாகிச் சிறுநீரிற் கழியும். அது மட்டுமல்லாமல், இரத்தத்திலுள்ள சீனி அதிகமாவதனல், உடம்பில் காபோவைதரேற்று (carbo hydrate) கொழுப்பு (fat) புரதம் (protein) இவற்றின்சேர்க்கையெறிகைபற்றி (metabolism) பாதிக்கப்பட்டுப் பல்வேறு வியாதிகளாகத் தோன்றுகின்றன.

மற்றும் சுவை மிகுந்த கட்டுரைகளை 7 6—64 இல் வெளியாகும் ஈழநாடு விஞ்ஞான மலராகிய அறிவொளியில் எதிர்பாருங்கள்



SCHOOL OF TECHNOLOGY, JAFFNA.
1964--65 COURSES

**Candidates with J. S. C. (English or Tamil Medium)**

Electrical Installation
Motor Mechanism
Radio Servicing
} One year Course Theory &Practical

**Candidates with G C E. (with passes in Maths, Physics & English**

Electrical Engineering Practice Preliminary
Electrial Engineering Practice Intermediate
Electrial Engineering Practice Final
} City& Guilds Lond. Exams.

A. M. I. E. E. (Part 1). Institution of Electrical Engineers Lond.

Candidates with G. C. E. (with Maths, English and preferably Drawing or Art.)

Authorised Draughtsmen--Surveyor General Exm.

Civil Engineering Drawing
Building Construction
} School Certificate.

Applications close on June 1, 1964. Courses commence on June 15. For further particulars & forms apply to:

"Citadel'
Chundikuli, Jaffna — Director
8-5-64.

# தீ பிடித்த பஸ் தானாக ஓடியது!

மாவிட்டபுரம், சனி

இன்று மாலை ஆறுமணியளவில் நாச்சிமார் கோவிலடியில் பஸ் ஒன்று தீப்பிடித்துக் கொண்டது. பஸ்ஸின் இயந்திர அறையுள் பிடித்துக் கொண்ட தீயை தக்க தருணத்தில் அணைத்ததால் அது பெரிதாக பரவாமலும், பஸ்ஸுக்கோ, பிரயாணிகளுக்கோ சேதமெதுவும் ஏற்படாமலுமிருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலை சென்றுகொண்டிருந்த பஸ்ஸின் இயந்திரத்தில் தீப்பிடித்தது. இதை உணர்ந்த பஸ் டிரைவர் தக்க நேரத்தில் அதைக் கண்டுபிடித்து அணைக்க முயற்சித்தார். டிரைவரும் மற்றும் சிலரும் தீயை அணைக்க முயற்சித்துக் கொண்டிருக்கையில் பஸ் தானாகவே இயங்கியதால் சில யார் தூரத்துக்கு டிரைவர் இன்றி ஓடியது. 'மெக்கனிக்'க் ஒருவரின் உதவியுடன் பின்னர் பஸ் நிறுத்தப்பட்டு, தீயும் அணைக்கப்பட்டது. பஸ்ஸுக்கு பெருமளவில் சேதம் ஏற்படவில்லை என்று தெரியவருகிறது.

பிரயாணிகள் பின்னர் இன்னொரு பஸ்ஸில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

## நீதிசேவைக் கமிஷனே காதிகளை நியமிக்கும்

### திருத்த மசோதா தயாராகிறது

கொழும்பு, சனி

குவாஸி கோர்ட்டுகளில் தலைமை வகிப்பதற்காக காதிகளை நியமிக்கும் அதிகாரம் நீதிச்சேவைக் கமிஷனருக்கு வழங்க வழிசெய்யும் முஸ்லிம் விவாக விவாகரத்து மசோதாவுக்கான திருத்தமொன்றுக்கு, உள்நாட்டு மந்திரி மந்திரி சபையின் அங்கீகாரத்தைக் கேட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தினர் தொடர்ச்சியாக செய்துகொண்டவேண்டுகோளின் பலாபலனாகவே மந்திரி மேற்கூறிய திருத்தமொன்றை கொண்டுவரப் பாடுபடுகிறார்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
World's Night Shows
SEXY al NEON
Techniscope color (Adults Only)

## "தமிழ்ப்பெண்கள்..."

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபை முதல்வரையும் வரவேற்றுப் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் வித்தியாலய நிதிக்கா வித்தியாலய மாணவிகளால் நடிக்கப்படும் 'சிலம்புச்செல்வி' நாடகத்திற்கு கொடுத்த அமோக ஆதரவு யாழ்ப்பாண மக்கள் கல்விக்குக் கொடுக்கும் மதிப்புக்கு சான்றாகுமெனக் குறிப்பிட்டார்

DEATH

Dr. K. Murugesu, retired Medical Superintendent, General Hospital Seremban (Malayasia), and brother of Mr.K. Kanapathipillai F. M. S pensioneer, Karainagar, died on 23-5-64 at his residence in Seremban. K. Kanapathipillai, Maruthadi, Karaninagar. 445

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30

ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) ஜுப்பிட்டர் (குருணாகல்) தாஜ்மஹால் (கல்முனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்
நானும் ஒரு பெண்
இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப்பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.

## "ஈழத்தின் ..."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

விழா விக்னேஸ்வர பூஜையுடன் ஆரம்பமாகியது. வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக நிர்வாகி திரு. மு. சபாரத்தினம் அவர்களிடம் நூற்பிரதிகளனைத்தையும் பெற்று பண்டிதமணி க. கணபதிப்பிள்ளை அவர்கள் வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார்கள். தலைவர் திரு. சுவாமிநாதன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

பண்டித மணியவர்கள் பேசுகையில்:-

"மனிதருடைய வாழ்க்கையில் ஆச்சரியப்படத்தக்க சம்பவங்கள் நிகழ்வதுண்டு. எனது வாழ்க்கையில் எனதுபுத்தகங்கள் வெளிவருவதே ஆச்சரியப்படத்தக்க சம்பவமாக யான் கருதுகின்றேன். 'நான் எழுத்தாளனானது எப்படி?' என்று தம்மைப்பற்றித் தாமே எழுதி வெளியிடும் காலமிது. மகாலிங்கசிவம், குமாரசுவாமிப்புலவர், கைலாசபதி முதலிய ஹிமாசலங்களுக்கு முன் கீரிமலையான எனக்கு புத்தகங்கள் எழுதவேண்டுமென்ற சிந்தனையே எழுந்ததில்லை. மாறாகப படிக்க வேண்டியது நிறைய உண்டு என்ற உணர்வே மேலோங்கியது. எனது எழுத்துக்கள் ஒருவாறு வெளிவரக்காரணமானவர் ஈழகேசரி திரு. பொன்னையா அவர்கள். எழுதத்தயங்கிய எனக்கு அவர் ஊக்கம் தந்தார். பின்னர் வானொலியிலும் பேசநேர்ந்தது. இவைகளே இப்போது நூலுருவல் பிரசுரமாகின்றன.

இந்தக் கட்டுரைத் தொகுதியில் விபுலானந்த அடிகள் பற்றிய ஒரு கட்டுரை வரவேண்டும் என்று விரும்பினேன். ஆனல் அங்ஙனம் செய்ய முடியாமற்போய் விட்டது. ஆனல் விபுலானந்தர் பற்றிய ஒரு கட்டுரை எழுதமுன் வருவோருக்கு உதவும் வகையில இந்நூலின் முகவுரையிலே குறிப்புகள் பல தந்திருக்கிறேன். விபுலாந்தருடைய பாடல்களை யாராவது திரட்டி எனக்குத் தந்துதவின் அவர் பற்றிய தனித்த ஒரு நூலே 'விபுலானந்தம்' என்ற தலைப்பில் எழுதல் கூடும்.

ஆசிரியர் பஞ்சாட்சரம் பேசுகையில்:-

வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகத்தின் பதிப்புகளுக்கு வெளி நாடுகளில் மிகுந்த மதிப்பிருப்பதாகவும், தென்னிந்திய சைவசித்தாந்த பதிபபுக்கழகம், திருமுருக கிருபானந்த வாரி முதலியோர் பாராட்டிக கடிதம் எழுதியிருப்தாயும் குறிப்பிட்ட நூலின் அமைபபுககுப் பெரிதும் காரணமான, திருவாளர்கள்: மு. சபாரத்தினம், எஸ். சின்னத்துரை, கே. கே. வி. செல்லையா ஆகியோரைப் பாராட்டினர்.

திருவாளர்கள்: பண்டிதர் வ. நடராஜன், ஆசிரியர் இராஜேந்திரம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

## கிழவரின் விபரீத ஆசை

ஜெய்ப்பூர், மே 24

எழுபதுவயதுக் கிழவர் ஒருவருக்கும் 17 வயதுப் பெண்ணுக்கும் நடைபெற இருந்த திருமணத்தை ஜெய்ப்பூர் மாஜிஸ்டிரேட் தடைசெய்தார். கிழவரின் உறவினர்களின் புகார்மூலம் இக்கிழவரின் விபரீத ஆசை தடைசெய்யப்பட்டது.

மன்னர், ஞாயிறு

பெரிய பண்டிவிரிச்சான் கிராமமக்கள், வைத்தியநிலையமிருந்தும் அத்தியாவசிய தேவைகளுக்குரிய மருத்துவ அலுவல்களுக்கும், மிகவும் கஷ்டமடைகின்றனர். 150 குடும்பங்கள் உள்ள இந்தக் கிராமத்தில் தடைல்நிலையம் பொது மலசலகூடமில்லை. காய்கறி வாங்குவதற்குகூட மூன்று மைல் தூரத்திலுள்ள மடுக்கோவிலுக்கு செல்லவேண்டிய நிர்பந்தமேற்பட்டிருக்கிறது.

# "சைவத்தின் புகழை நாம் காப்பாற்ற வேண்டும்"

## திருப்பணிஉப குழு கூட்டத்தில்கோரிக்கை

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சி காரியாதிகாரிப பிரிவிற்குள் திருக்கேதீஸ்வரத் திருப்பணி நிதிதிரட்டுவதற்காக நியமிக்கப்பட்ட உபகுழுவினர் பொதுக்கூட்டம் நெல்லியடி பட்டினசபைத் தலைவர் திரு. வே. சு. பொன்னையா தலைமையில் நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றிலில் நடைபெற்றது

தலைவர் தமது உரையில் கூறியதாவது: "இலங்கை வாழ் தமிழருக்கு பல்லாயிரம் வருடங்களாக புனிதஸ்தலமாக இருந்துவரும் கதிர்காமம் இன்று பறிபோகும் நிலையில் இருக்கிறது. இலங்கை வாழ் சைவசமயிகளுக்கு மிகப் புராதன சிவஸ்தலமாகவுள்ள திருக்கேதீஸ்வரத்தை எங்கள் எல்லோராலும் இயன்றவரை நிதியுதவி அதன் திருப்பணி வேலைகளை விரைவில் முடித்துச் சைவத்தின் புகழைக் காப்பாற்ற வேண்டும். இத் திருப்பணியில் லசவபாடசாலைகளும் கல்லூரிகளும் கிராம முன்னேற்றச்சங்கங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களும் தனிப்பட்ட சைவப் பெரியார்களும் முன்வந்து தங்களால் இயன்ற பொருளுதவி செய்வார்களென எதிர்பார்க்கிறோம்.

திருப்பணிச்சபையின் தலைவர் சேர் கந்தையா வைத்தியநாதன், வடமராட்சியின் பல பாகங்களிலும் கூடியவிரைவில் இவ்விடயமாகப் பிரசாரம் செய்வதுடன் வடமராட்சியில் முதன்முதலாக இப்பிரசாரத்தை கரணவாய் பூதந்தேவனார் அரங்கில் நடைபெறும் திருக்குறள் மகாநாட்டில் ஆரம்பிபபார் என நம்புகிறேன். புராதன கதிர்காமத்தைப் போன்று திருக்கேதீச்சரத்தையும் ஒரு புண்ணியஸ்தலமாக்குவது எமது முக்கிய கடனாகும். மானிப்பாய், தெல்லிப்பளை முதலிய மற்றும் காரியாதிகாரி பிரிவுகளிலும் இத்திருப்பணி விடயமாக போதிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது."

இக்கூட்டத்திற்கு திருக்கேதீஸ்வரசுவாமிகோவில் திருப்பணி நிதிச்சபையின் காரியதரிசி திரு. த. சிவலிங்கமும் சமூகமளித்திருந்தார்.

## "அழுக்காறு நீங்கவேண்டும்"

உடுப்பிட்டி, ஞாயிறு

இறைவன் சர்வ வியாபியாக இருக்கிறான் ஞானப் பழம் அவன். முருகனைப் பார்த்து மற்றவர்கள (ஞானப்) பழம் நீ என்றார்கள் பழம் நீ திரிந்து பழநி ஆகிவிட்டது. தமிழ் நாட்டிலே பழனியிலே மூன்று ஓசைகள் கேட்குமாம் செந்தமிழோசை, திருவும் அன்னமும் வந்தவர்க்கு அன்புடன் வழங்கும் ஓசை, கந்தவேள் பஜனை கேட்கும் ஓசை. இவ்வரிய திருப்பதியாகிய பழனியிலே தான் தமிழ்ப் பித்தனாகிய முருகன் ஏடா போடா மூடா வேடா! என்று குற வள்ளி நாயகி ஏசியபோதுகூட 'மூத்த மிழால்வைதாள்' என்று கோபிக்காதிருந்த முருகன் குடி கொண்டிருந்தான்.

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தில் வண்ணை முத்தமிழ்மணி திரு. சி. எஸ். எஸ். மணிபாகவதவர் 'முருகம்மையார்' என்னும் விடயம்பற்றி கதாகாலட்சேபம் நடாத்துகையில் மேற்கண்டவாறு கூறினர். மேலும் அவர் பேசுகையில் "அழுக்காறு இல்லாதவன் தான் அருளுலகத்தை அடைய முடியும். மற்றவர்களைக் குறைகூறுவதில் மட்டும் நாம் வல்லவர்களாக இருக்கிறோம். இவற்றையெல்லாம் போக்கவே இறைவன் குருவடிவாக வந்து எமக்குப் போதிக்கின்றார் என்பதை உணர வேண்டும் என்று கூறினர். திரு. மு. கந்தவனம் நன்றியுரை கூறினர்.

## தமிழ்சங்க நிர்வாகிகள்

கொழும்பு, சனி

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இருபத்திரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: சேர் கந்தையா வைத்தியநாதன், துணைக்காப்பாளர்கள்: திருவாளர்கள் க. ச. அருள்நந்தி, கலாநிதி க. கணபதிப்பிள்ளை, கந்த முருகேசன், அ. சபாரத்தினம், யோன் செல்லப்பா, த. நடராசா, செ. நடராசா, செனட்டர் சு. நடேசன், டாக்டர் த. நல்லைநாதன், ப. நவரத்தினராசா, திருமதி நடராசா. தலைவர். திரு. மு. வயிரவப்பிள்ளை, துணைத்தலைவர்கள்: திருவாளர்கள் பண்டிதர் கா. பொ. இரத்தினம், வ. அருளம்பலம், கோ. ஆழ்வாப்பிள்ளை, கா. கா. இரத்தினம், வே. கணபதிப்பிள்ளை, தா. கார்த்திகேசு, சோ. சிவசம்பு, சி. த. சிவநாயகம், வே. சுப்பையா, இ. பொ. செல்லையா. பொதுச் செயலாளர்: திரு. க. வயிரமுத்து, துணைப் பொதுச் செயலாளர்: திரு. க. தம்பையா, பொருளாளர்: திரு. க. தங்கராசா, துணைப் பொருளாளர்: திரு. க. கா. கனகராசா, உறுப்புரிமைச் செயலாளர்: திரு. வ. க. நல்லையா, நிலைய அமைப்புச் செயலாளர்: திரு. சு. க. ச. பொன்னுத்துரை, நூல் நிலையப் பொறுப்பாளர்: திரு. செ. வேலாயுதபிள்ளை.

பின்வருவோரும் பிற ஆட்சி குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்: திருவாளர்கள் யே. ம. இராசரத்தினம், பெ. கணபதிப்பிள்ளை. இ. ஒ. கணேசநாதன், ப. கதிரவேலு ஆச்சாரி, கி. ஆ. கந்தையா, சே. க. சண்முகம்பிள்ளை, ச. சரவணமுத்து, ஆ. சின்னத்தம்பி, சி. செந்தில்நாதன், வித்துவான் இ. சி. சோதிநாதன், கா. ஆ. தவத்துரை எஸ். பாலசுப்பிரமணியம், க. பேரம்பலம், வை. பொன்னுச்சாமி, வ. வல்லிபுரம்.

அநுராதபுரம்

## புனிதநகரத்தில் ஆலயங்கள் அழிக்கப்படுகின்றன

அநுராதபுரம், ஞாயிறு

ஏறக்குறைய நூறு வருடப் பழமை வாய்ந்த புரொட்டஸ்தாந்து (இலங்கைத் திருச்சபை) கிறிஸதவ திருச் சபையைச் சேர்ந்த தேவாலயம் அநுராதபுரப புனிதநகர்த் திட்டத்தின் கீழ் பாதுகாபபுச் சபையினரால் இடித்து அழிககபபடுகின்றது. ஆலயத்துககு அண்மையில் திருச்சபையினல் நிறுவபபட்டதும சமீபத்தில் அரசாங்கத்தினல் பொறுப பேற்கப்பட்டதுமான பாடசாலை முன்னதாகவே இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு விட்டது.

அழிக்கப்படும் ஆலயத்துக்குப்பதிலாக புதிய ஆலயமொன்றைப் புதிய நகரத்தில் நிர்மாணிப்பதற்கு வேண்டிய ஆயத்தங்களை பேற்படி திருச்சபைசெய்துவருகின்றது தற்போது ஆராதனை தற்காலிக கட்டட மொன்றில் நடைபெற்று வருகின்றது.

திருச்சொருபங்கள் அப்புறப்படுத்தப்பட்ட நிலையில் வெறுமையாகக் கையளிககபபட்ட கத்தோலிகக தேவாலயத்தின் குருமார் விடுதியும் இடித்துத் தரைமட்டமாககபபட்டுவிட்டதுகூடியவிரைவில் ஆலயகட்டடமும் அழிககப்படலாமென கூறப்படுகின்றது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல்வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.